Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, NOVEMBER 23, 2021

செவ்வாய்க்கிழமை நவம்பர் 23, 2021 | ஒளி: 07 கதிர்: 160 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## உணவுப் பொதி, தேநீர் விலைகளும் கூடின



அதிரடியான தீர்மானத்தை எடுத்துள்ள உணவக உரிமையாளர்கள் சங்கம், உணவுப் பொதி, தேநீர் ஆகியவற்றின் விலைகளையும் அதிகரித்துள்ளது.

இன்று (23) முதல் அமலாகும் வகையில், உணவுப் பொதியொன்றின் விலையை 20 ரூபாவால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேநீர் கோப்பையொன்றின் விலை 5 ரூபாயால் அதிகரிக்கப்படுவதாக உணவக உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# சேர் பெயில் அன்று; இன்று சேருக்கு பைத்தியம்

### ஜனாதிபதியை விமர்சிப்பதாக பிரசன்ன தெரிவிப்பு

பா.நிரோஸ்

ஜனாதிபதி தோற்றுப் போனவர், சேர் பெயில் எனக் கூறி விமர்சித்த ஹரின் பெர்ணான்டோ எம்.பி, தற்போது ஜனாதிபதியை பைத்தியம் என விமர்சிப்பதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

வரவுசெலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நேற்று (22) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி பெயில் (தோல்வி) என்று கூறிய எதிர்க்கட்சி எம்.பி ஹரின் பெர்ணான்டோ, தற்போது ஜனாதிபதியை பைத்தியம் என்று விமர்சிக்கிறார். 69 இலட்சம் மக்கள் ஜனாதிபதிக்கு வாக்களித்துள்ளனர். யுத்தத்தை நிறைவு செய்ய தலைமை தாங்கியவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எனவும் தெரிவித்தார்.

அரச தலைவர்களை எவ்வாறு பேசுவது என்பதை ஹரின் தெரிந்துகொள்ள வேண்டும். சுற்றுலாத் துறையினர் தொடர்பில் ஹரின் பேசுகிறார். ஆனால், நாட்டில் கொரோனா வைரஸை பரப்ப போராட்டங்களைச் செய்கிறார்கள்.

தற்போது மனோ கணேசனுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவரிடமிருந்து உருவாகும் கொரோனா கொத்தணியில் பலருக்கு தொற்று உறுதி செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.



2022ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டின்

## இரண்டாம் வாசிப்பு நிறைவேறியது

### ஆதரவு-153: எதிர்ப்பு-60

### எதிர்வரிசையிலும் ஆதரவு

### 11 பேர் சமூகமளிக்கவில்லை

பா.நிரோஸ்

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 93 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நேற்று (22) நிறைவேற்றப்பட்டது. திட்டத்துக்கு ஆதரவாக 153 பேரும், எதிராக 60 பேரும் வாக்களித்தனர்.

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல வாக்கெடுப்பை கோரினார். இதனை தொடர்ந்து இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

## மொட்டு உறுப்பினரை கம்பத்தில் கட்டிய மக்கள்

மதுபோதை தலைக்கேறிய நிலையில், பிரதேசவாசிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல்வாதியொருவர், மின்கம்பமொன்றில் கட்டப்பட்ட சம்பவம் பாணந்துறை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

மேயுயர் சபையில்

## பெண் எம்.பிக்கள் மீது வாய்மொழி ‘வசை’

### சபாநாயகருக்கு சுதர்ஷினி கடிதம்



பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர், பாராளுமன்றத்தில் வாய்மொழி துஷ்பிரயோகத்துக்கு உட்படுகின்றமை தொடர்பில், பாராளுமன்றத்தின் பெண் உறுப்பினர்கள் மன்றத்தின் தலைவர், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளே, சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியை

## உயிர் போகும் முன் அம்பலப்படுத்துவேன்

பாலித ஆரியவன்ஸ




எனது உயிர் போகும் முன்னர், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான மூளையாக செயற்பட்ட சூத்திரதாரி யார் என்பதை அம்பலப்படுத்துவேன் எனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ, இந்த அரசாங்கத்தை நாங்கள் அதிகமாக தாக்குவதால் எனக்கும் மனுஷ நாணயக்காரவுக்கும் மரண அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றார்.

நேற்று முன்தினம் (21) பதுளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## புதுடெல்லி பயணமாகிறார் பசில்; மோடியையும் சந்திக்க ஏற்பாடு





நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்தியாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார் என்றும் புதுடெல்லிக்கு விஜயம் செய்யும் அவர், இந்தியப் பிரதமர் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை இலங்கையும் இந்தியாவும் முன்னெடுத்து வருகின்றன எனவும் பீரிஸ் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## சாதனையாளர்கள் கௌரவிப்பு

2020 கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் விசேட சித்தி பெற்று நாட்டில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஐந்து மாணவ, மாணவிகள், வரலாற்றில் முதல் தடவையாக 9 பாடங்களிலும் விசேட சித்தி பெற்ற விழிப்புலனற்ற மாணவர்கள் இருவர் ஆகியோர் பாராளுமன்ற வளாகத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தனர்.
சிறப்பு பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுடன் பிரதமர் நட்பு ரீதியான கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், அவர்களது எதிர்கால எதிர்பார்ப்புகள் குறித்தும் கேட்டறிந்ததுடன், எதிர்கால கல்வி நடவடிக்கைகள் வெற்றிபெற வாழ்த்துகளையும் பிரதமர் தெரிவித்தார்.

மூன்றாவது நாளாக சீ.ஐ.டியில் ஆஜரான

## அருட் தந்தையிடம் 5 மணிநேரம் வாக்குமூலம்

### சீ.ஐ.டியைச் சுற்றி மதகுருமார் மௌனப் போராட்டம்




அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சுரேஷ் சலே வழங்கிய முறைப்பாடு தொடர்பில், வாக்குமூலம் பெறுவதற்காக 3 ஆவது நாளாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு (சீ.ஐ.டி) அழைப்பட்ட அருட்தந்தை சிறில் காமினி பெர்ணான்டோ, சுமார் 5 மணிநேரம் வாக்குமூலம் வழங்கினார்.

தொடர்ச்சி P2

## உணவுத் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படாது

பா.நிரோஸ்

எதிர்க்கட்சிகள் கூறுவதைப்போல, நாட்டில் உணவு பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது எனத் தெரிவித்த விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, நெல் உற்பத்திக்காக எந்தவோர் இரசாயன உரமும் இறக்குமதி செய்யப்படாது எனவும், மரக்கறி உற்பத்திக்கே விசேட உர இறக்குதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் நேற்று (22) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நனோ நைட்ரஜன் உர இறக்குமதி தொடர்பில்,

தொடர்ச்சி P2

## எதிர்க்கட்சிக்கு தேர்தல் தண்டனை கிடைக்கும்

பா.நிரோஸ்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பைத்தியம் என விமர்சிக்கிறார்கள். இதுவே நாட்டில், ஜனாதிபதி உருவாக்கியுள்ள ஜனநாயகம் எனத் தெரிவித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, உரிய நேரத்தில் தேர்தலை நடத்தி, மக்கள் தண்டனையை எதிர்க்கட்சிக்குப் பெற்றுக்கொடுப்போம் எனவும் தெரிவித்தார்.

வரவு- செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நேற்று (22) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

தொடர்ச்சி P2

## “யுகதனவியை வழங்க இடமளியோம்”

பா.நிரோஸ்

யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் இயற்கை திரவ எரிவாயு விநியோகத்தின் உரிமையை அமெரிக்காவுக்கு வழங்குவதற்கு ஒருபோதும் இணங்கப்போவதில்லை எனத் தெரிவித்த வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, பெற்றோலிய கூட்டுத்தாபனத்தையும் தனியாருக்கு வழங்க இடமளிக்கப்போவதில்லை என்றார்.

தொடர்ச்சி P2

## கொழும்பு நாட்டாமைகள் வேலைநிறுத்த போராட்டம்



கொழும்பில் பணியாற்றும் நாட்டாமைகள் அனைவரும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதுடன், எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர். இதனால், கொழும்பின் பிரதான இடங்களில் பரபரப்பான நிலைமையொன்று நேற்று (22) ஏற்பட்டிருந்தது.

தங்களுக்கான கொடுப்பனவை, 15 ரூபாயால் அதிகரித்துத் தருமாறு கோரியே, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தற்போதைக்கு மூடையொன்றை அல்லது பொதியொன்றை இறக்கினால் அல்லது ஏற்றினால், அவர்களுக்கு 10ரூபாய் அல்லது 8 ரூபாய் இன்றேல் 6 ரூபாய் மட்டுமே வழங்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## பூஜித்துக்கு எதிராக 855 குற்றச்சாட்டுகள்

### முழுமையாக மறுத்தார் பூஜித்: நிலந்த ஜயவர்தன இன்று சாட்சியம்

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான வழக்கின் பிரதிவாதியான பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிரான 855 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப் பத்திரிகை, விசேட மேல் நீதிமன்றத்தில் நேற்று (22) வாசிக்கப்பட்டது.

நீதிபதிகளான நாமல் பலல்லே, ஆதித்ய பட்டபெதிகே, மொஹமட் இஸர்தீன் ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று (22) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## ‘கலா கீர்த்தி அபிமானி’ விருது வழங்கி கௌரவம்



பிரபல இளம் பாடகர் யொஹானி டி சில்வாவுக்கு அகில இலங்கை கலாசார சுற்றாடல் பாதுகாப்பு அமைப்பின் ‘கலா கீர்த்தி அபிமானி’ விருது வழங்கப்பட்டுள்ளது. கலைத்துறையினூடாக இலங்கைக்கு அவர் வழங்கிய பிரபலத்தை கௌரவிக்கும் வகையில், இந்த அமைப்பு அவருக்கு இந்தக் கௌரவ விருதை வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

## அலைபேசி, கேள்கருவியுடன் ரஞ்சன் ராமநாயக்க சிக்கினார்



வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிடமிருந்து அலைபேசி மற்றும் ஹேண்ட் ஃப்ரீ (கேள்கருவி) கைப்பற்றப்பட்டுள்ளன என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சன் ராமநாயக்க, முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## அருட் தந்தையிடம் 5 மணிநேரம் வாக்குமூலம்

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று (22) காலை 9.30 மணிக்கு வருகைதருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், சீ..டியின், 1ஆம் இலக்க விசேட புலனாய்வுப் பிரிவில் முன்னிலையில் ஆஜராகி மூன்றாவது முறையாக வாக்குமூலத்தை வழங்கிய பின்னர், பிற்பகல் 2.30 மணியளவில் வெளியேறினார்.

வாக்குமூலம் பெறப்பட்ட சந்தர்ப்பத்தில், கிறிஸ்தவ மதகுருமார் சீ.ஐ.டியைச் சுற்றி மௌனப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் நீதிக்கான உலகளாவிய மன்றம், 23.10.202 அன்று சூம் தொழில்நுட்பம் வழியாக ஏற்பாடு செய்த மாநாட்டில் சிறில் காமினி வெளியிட்ட கருத்து தொடர்பில், அரச புலனாய்வுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

அதற்கமைய, ஏற்கெனவே 2 தடவைகள் சீ.ஐ.டிக்கு அழைக்கப்பட்ட அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ, இரண்டு நாள்களிலும் தலா 8 மணித்தியாலங்களுக்கு மேல் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் புகைப்படங்கள், பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அருட்தந்தையர்கள் காட்சிப்படுத்தியிருந்தனர்.

## இரண்டாம் வாசிப்பு நிறைவேறியது

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழத் தேசிய கூட்டமைப்பு, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் வரவு- செலவு திட்டத்தை எதிர்த்து வாக்களித்தன.

எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் வழமைபோல அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்பட்டனர். ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுர பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான், டயானா கமகே ஆதரவை வழங்கினர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீஸ், பைசல் ஹாசிம், நசீர் அஹமட் ஆகியோரும் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக, வரவு -செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

முஸ்லிம் தேசிய கூட்டணியின் புத்தளம் மாவட்ட எம்.பி.யான அலிசப்ரி ரஹீம் முன்பு அறிவித்திருந்ததைபோல ஆதரவை வழங்க, அகில இலங்கை மக்கள் கங்கிரஸின் உறுப்பினர் முஷாரப், இஷாக் ரஹ்மான் ஆகியோரும், அரவிந்த குமாரும் ஆதரவாக வாக்களித்தனர்.

இலத்திரனியல் முறையில் வாக்கை செலுத்த முடியாத எம்.பிகள் ஆசனங்களில் இருந்து எழுந்து கையை உயர்த்தி தங்களது வாக்குகளை செலுத்தலாம் என சபாநாயகர் விடுத்த அறிவிப்பை அடுத்து, கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன், இராதாகிருஸ்ணன் ஆகியோர் எதிர்த்து வாக்களித்தனர்.

இதேவேளை, இன்றைய பாராளுமன்ற அமர்விலும் வாக்கெடுப்பிலும், 11 எம்.பிகள் சமூகமளிக்கவில்லை. கொரோனா வைரஸ் தொற்றால் தமிழ் முற்போக்குக் கூட்டணி மனோ கணேசனும், வெளிநாட்டுப் பயணத்தால் எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரும் சபைக்கு வரவில்லை. ரணில் விக்கிரமசிங்க, சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்டவர்களும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

## உணவுத் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படாது

விவசாய அமைச்சர் என்றவகையில் தனக்கும் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவுக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை என்றார்.

“நனோ நைட்ரஜன் தொடர்பில் சந்தேகங்கள் இருந்தால் கோப் குழுவுக்கு அழைத்து விசாரணை செய்யுங்கள். தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவலைக் கோருங்கள். இது தொடர்பான எந்தவொரு விவாதத்துக்கும் நான் தயார்” என்றும் குறிப்பிட்டார்.

மரக்கறிகளின் விலைகள் கடுமையாக அதிகரித்துள்ளதை ஏற்றுகொள்கிறோம். நாட்டில் கடந்த 3 மாதங்களாகத் தொடர்ந்து பெய்த மழையே இதற்குக் காரணம். எனவே, மரக்கறி உற்பத்திக்கு தேவையான விசேட உரத்தை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனைவிடுத்து நெல் உற்பத்திக்குத் தேவையான இரசாயன உரம் ஒருபோதும் இறக்குமதி செய்யப்படாது” என்றார்.

# பெண் எம்.பிக்கள் மீது வாய்மொழி ‘வசை’

அண்மையில், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால், பெண் எம்.பியொருவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட கருத்து தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு, சபாநாயகருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளேயின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னரும் உயரிய சபையான பாராளுமன்றத்தில், பெண் உறுப்பினர்களுக்கு எதிராக வாய்மொழி துஷ்பிரயோகங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இது ஜனநாயகத்தை மதிக்கும் சமூகத்தில் நல்ல முன்னுதாரணமாக அமையாது எனத் தெரிவித்துள்ளார்.

சட்டத்தை உருவாக்கும் இடமொன்றில் அதற்கு பங்களிக்கும் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும் பெண்கள், அந்த இடத்திலேயே வாய்மொழி துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகிறார் எனின், இதன்மூலம் ஒட்டுமொத்த சமூகத்தின் சீரழிவும் புலப்படுவதாகத் தெரிவித்துள்ள அவர், வேலைத்தளங்கள், பொது பயணிகள் பஸ் சேவை, தெருக்கள் உள்ளிட்ட இடங்களில் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி அதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் உயரிய நிறுவனம் ஒன்றில் பெண் உறுப்பினர் ஒருவருக்கு எதிரான வாய்மொழி துஸ்பிரயோகம் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது என்றார்.

பெண்களுக்கு எதிரான வன்முறையானது, ஒரு சிக்கலான சமூகப் பிரச்சினையாகவும் அடிப்படை மனித உரிமைப் பிரச்சினையாகவும் மாறியுள்ளது. எனவே தகாத வார்த்தைகளால் திட்டுவது, வாய்மொழி துஷ்பிரயோகம், அவமானப்படுத்தல், விமர்சித்தல் என்பன சர்வசாதாரணமாக இடம்பெறுவதுடன், மீயுயர் சபைக்குள்ளும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றமை துரதிர்ஷ்டவசமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலில் பெண்களின் பங்களிப்பு குறைவான மட்டத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில், பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 12 பெண் உறுப்பினர்களின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் பாராளுமன்றத்தில் கருத்தாடல்கள் இடம்பெறுவதற்கான சூழலை ஏற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மொட்டு உறுப்பினரை கம்பத்தில் கட்டிய மக்கள்

கல்பாத்த பிரதேசத்தில் பிரதேசவாசிகளுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டதை அடுத்தே, அவர் இவ்வாறு கட்டப்பட்டுள்ளார்.

தள்ளாடிக்கொண்டிருந்த அவரைப் பிடித்து மின்கம்பமொன்றில் கட்டிய பிரதேசவாசிகள், அது தொடர்பில் களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளனர். அதனையத்து விரைந்துவந்த பொலிஸார், அவரை கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர்.

தாமரை மொட்டைச் சின்னமாகக் கொண்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த மேற்படி பிரதேச சபை உறுப்பினர், கல்பாத்த பிரதேசத்தில் வைத்து மேலும் சிலருடன் இணைந்து மது அருந்தியுள்ளார்.

அதன்பின்னர், அங்கிருந்து கிளம்பிய அவர், கல்பாத்த, பஹுருபொல பிரதேசவாசிகளிடம் அநாகரிகமான முறையில் நடந்துகொண்டுள்ளார்.

அதன்பின்னர், அப்பகுதியைச் சேர்ந்தவர்கள், தள்ளாடிக்கொண்டிருந்த அவரைப் பிடித்து, மின்கம்பமொன்றில் கட்டிவைத்து, பொலிஸாரின் அவசர இலக்கத்துக்கு அறிவித்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர், நாகொட வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனைகளில், அவர் மது அருந்தியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனையடுத்து, அவரை களுத்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

## கொழும்பு நாட்டாமைகள் வேலைநிறுத்த போராட்டம்

இந்நிலையில், அந்தக் கொடுப்பனவை 15 ரூபாயால் அதிகரித்துத் தருமாறு கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சாதாரண ஹோட்டலொன்றில் ஒரு கோப்பை தேநீரின் விலை 30 ரூபாயாகும் என சுட்டிக்காட்டியுள்ள அவர்கள், தங்களுக்கான கொடுப்பனவை 15 ரூபாயால் அதிகரிக்குமாறு கோரியுள்ளனர்.

தங்களுடைய கோரிக்கை தொடர்பில், உரிய தரப்பினருடன் இன்றையதினம் பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனத் தெரிவித்துள்ள நாட்டாமைகள், ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு கிடைக்காவிடின், அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அறிவிக்கப்படும் என்றும் எச்சரித்தனர்.

**“ சாதாரண ஹோட்டலொன்றில் ஒரு கோப்பை தேநீரின் விலை 30 ரூபாயாகும் என சுட்டிக்காட்டியுள்ள அவர்கள், தங்களுக்கான கொடுப்பனவை 15 ரூபாயால் அதிகரிக்குமாறு கோரியுள்ளனர்**

## புதுடெல்லி பயணமாகிறார் பசில்; மோடியையும் சந்திக்க ஏற்பாடு

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் புதுடெல்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் ஆகியவை இணைந்து, விஜயம் மற்றும் சந்திப்புக்கான விவரங்களை விரைவில் அறிவிக்கும் என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு இன்னும் சில வாரங்களில் இடம்பெறுமெண, ஊடகவியலாளர்களை நேற்று (22) சந்தித்த போது, அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இதேவேளை, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்தியாவின் சிரேஷ்ட அமைச்சர்கள், சிரேஷ்ட உயரதிகாரிகளுடன் ஏற்கெனவே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார். இந்தியாவுடன் எங்களுக்கு பலமான உறவு இருக்கிறது. அது ஒரு பகுதியை மட்டும் மையப்படுத்தியதாக இல்லை.

இலங்கைக்குத் தேவை ஏற்படும் போதெல்லாம் இந்தியா எப்போதும் உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவித்துள்ள பீரிஸ், எவ்வாறாயினும், இந்த விஜயத்தின் போது நிதியமைச்சர் இந்தியாவிடமிருந்து அதிக கடன்களைப் பெற மாட்டார்.

அதற்குப் பதிலாக, நிதியமைச்சர் இந்தியாவிடமிருந்து அதிக முதலீடுகளை நாடுவார் என்றும், மேலும் அதிக சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் ஆராய்வார் என்றும் ஜி.எல். பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

**“ இந்தியாவுடன் எங்களுக்கு பலமான உறவு இருக்கிறது. அது ஒரு பகுதியை மட்டும் மையப்படுத்தியதாக இல்லை. இலங்கைக்குத் தேவை ஏற்படும் போதெல்லாம் இந்தியா உதவிகளை வழங்கி வருகிறது. நிதியமைச்சர் இந்தியாவிடமிருந்து அதிக கடன்களைப் பெற மாட்டார்**

## எதிர்க்கட்சிக்கு தேர்தல் தண்டனை கிடைக்கும்

தேர்தலை நடத்துவதற்கான பொருத்தமான நாளில் தேர்தலை அரசாங்கம் நடத்தும். தேர்தல் நடக்கும் போது, மக்கள் வழங்கும் தண்டனை எதிர்க்கட்சிகளுக்குக் கிடைக்கும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடந்த காலங்களில் உதவியவர்களே தற்போது விமர்சிக்கிறார்கள். விமர்சனங்களுக்கு வரையறைகள் இருப்பதை எதிர்க்கட்சிகள் நினைவில் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதியை பைத்தியம் என விமர்சிக்கிறார்கள். இதுவே ஜனாதிபதி நாட்டில் உருவாக்கியுள்ள ஜனநாயகம். ஜனாதிபதி பைத்தியம் என விமர்சிப்பதால் நாம் குழப்பமடையப்போவதில்லை.

ஜனாதிபதி பெயர் தொடர்பில் பலருக்குப் பிரச்சினை இருக்கிறது. 2 வருடங்களுக்குப் பின்னரே ஜனாதிபதியின் பெயர் கோட்டாபய நந்தசேன என்பது தெரியவந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

எரிபொருள் தட்டுப்பாடு என்றார்கள். மக்களும் அதனை நம்பி வரிசையில் நின்றார்கள். தற்போது நாட்டில் எரிபொருள் வரிசை இருக்கிறதா எனவும் கேள்வி எழுப்பினார்.

தடுப்பூசிகள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு சிறந்த தடுப்பூசியான ஃபைசர் தடுப்பூசியை அரசாங்கம் வழங்கியது என்றார்.

## ‘கலா கீர்த்தி அபிமானி’ விருது வழங்கி கௌரவம்

இந்நிலையில், புதிய தலைமுறைப் பாடகி யொஹானி திலோகா டி சில்வாவைப் பாராட்டும் வகையில் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் இன்று (23) ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணத்தால் அந்நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டள்ளது என பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## உயிர் போகும் முன் அம்பலப்படுத்துவேன்

தொடர்ந்து தெரிவித்த அவர், “சில காரணங்களை அம்பலப்படுத்த வேண்டியுள்ளது. இம்முறை போகும் போது பாரிய ஆபத்தான நிலையொன்று ஏற்பட்டுள்ளது” எனத் தெரிவித்த அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தனக்கு எதிராக சேறு பூசப்பட்டது. அதனால் தான் தனக்கு கொழும்புக்குச் செல்ல நேரிட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விடயங்களுக்கு பதுளையில் இருந்துக்கொண்டு எதுவும் செய்ய முடியாது என்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர், தன் மீது முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்களால் எனது பிள்ளைக்கு பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால், இன்று என்ன நடந்தது. இந்த நாட்டுக்கு பாரிய சாபம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

என்னை எப்படியாவது உள்ளே தள்ளிவிட முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்த அவர், “நான் இன்று கூறுகிறேன். இந்தத் தாக்குதலுக்கு அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டும். அதை தான் நிரூபிப்பேன். தனது மூச்சு நிற்கும் முன்னர் அதனை செய்வேன்” என்றார்.

## அலைபேசி, கேள்கருவியுடன் ரஞ்சன் ராமநாயக்க சிக்கினார்

எலும்பு மூட்டு பிரிவில் அனுமதிக்கப்படுவதற்காக கடந்த 10ஆம் திகதியன்று, கொழும்பு, வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் கட்டுப்பாடு மற்றும் புனர்வாழ்வு பிரிவின் ஆணையாளர் ஜெனரல் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

சிகிச்சைக்காக தடுத்து வைக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க, நேற்று முன்தினம் (21) இரவு 10.00 மணியளவில் சிறைச்சாலை வைத்தியசாலையில் கடமையாற்றும் சிறைச்சாலை அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது மேற்குறிப்பிட்ட சாதனங்கள் கைப்பற்றப்பட்டன .

சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் 78ஆவது பிரிவின் கீழ் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு, சிறைத் தீர்ப்பாயத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய குழாம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்றும் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பூஜித்துக்கு எதிராக 855 குற்றச்சாட்டுகள்

அடிப்படைவாதிகளால் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் புலனாய்வு துறையினருடாக தகவல் கிடைத்தும், தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காததமையால், கடமையை மீறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை முன்வைத்து, சட்டமா அதிபரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

855 குற்றச்சாட்டுகள் அடங்கிய அவருக்கு எதிரான குற்றப் பத்திரிக்கை நீதிமன்ற உரைபெயர்ப்பாளரினால் சுமார் ஒரு மணித்தியாலமாக வாசிக்கப்பட்டது. அதன்பின்னர், தனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள சகல குற்றச்சாட்டுகளையும் மறுத்த பிரதிவாதியான பூஜித் ஜயசுந்தர, தான் நிரபராதி என நீதிமன்றுக்கு தெரிவித்தார்.

இதனிடையே, எழுந்த பூஜித் ஜயசுந்தரவின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ரொஷான் தெஹிவல, “தமது சேவை பெறுநர், பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய காலத்தில் ஈஸ்டர் தாக்குதல்களை மேற்கொண்ட பயங்கரவாதிகளுக்கு வேண்டுமென்றே ஆதரவளிக்கவில்லை அல்லது கடமைகளை புறக்கணிக்கவில்லை” என நீதிமன்றுக்கு அறிவித்தார்.

எவ்வாறாயினும், முறைப்பாட்டில் முன்வைக்கப்பட்டுள்ள 33 குற்றச்சாட்டுகளையும் சாட்சி வழிநடத்தல் இன்றி ஏற்றுக்கொள்வதாக பாதிக்கப்பட்டோர் தரப்பு சட்டத்தரணி நீதிமன்றில் சுட்டிக்காட்டினார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி சஹ்ரான் ஹாஷீம் தலைமையிலான இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியோர் தேவாலயம் உள்ளிட்ட 07 இடங்களில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டமை, பலர் உயிரிழந்தமை மற்றும் மேலும் பலர் காயமடைந்தமை தொடர்பில் பாதிக்கப்பட்டோர் தரப்பு சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

அது தொடர்பான பிரேத பரிசோதனை மற்றும் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையை சாட்சி விசாரணை இன்றி ஏற்றுக் கொள்வதற்கும் பாதிக்கப்பட்டோர் தரப்பு தயாரென அவர் கூறினார்.

இந்த வழக்கின் மேலதிக விசாரணைகளை இன்று (23) வரை ஒத்திவைக்கப்பட்டது.

இன்றையதினம், அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் பிரதானியும் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான நிலந்த ஜயவர்தன, மன்றில் சாட்சியமளிக்கவுள்ளார்.

## ‘யுகதனவியை வழங்க இடமளியோம்’

பாராளுமன்றத்தின் நேற்றைய (22) அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், யுகதனவி மின் உற்பத்தி நிலையம் வலு சக்தி அமைச்சுக்குக் கீழ் வருவதில்லை. அது வேறோர் அமைச்சுக் கீழேயே வருகிறது. அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை பாதுகாப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். எனினும், யுகதனவியை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு இடமளிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

# முடிந்தால் தேர்தலை நடத்துங்கள்

## சஜித் அணி சவால்

பா.நிரோஸ்

மக்கள் ஆணை யாருக்கு இருக்கிறது என்பதை அறிய, மாகாண சபை தேர்தலை நடத்திப் பாருங்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் சவால் விடுத்தார்.

வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் நேற்று (22) கலந்துகொண்டு உரையாற்றிய அவர், ஜனாதிபதி ஆட்சிக்கு வந்ததும் சித்திரம் வரைந்த இளைஞர்கள், தற்போது நாட்டை விட்டு வெளியேறுவதற்காக கடவுசீட்டை பெற வரிசையில் நிற்கிறார்கள். இருப்பதற்கு சிறந்த நாடு என்பதற்குப் பதிலாக,



நாட்டைவிட்டு வெளியேறும் நிலைக்கு இளைஞர்களை அரசாங்கம் தள்ளியுள்ளது.

நனோ நைட்ரஜின் இறக்குமதியில் இடம்பெற்ற ஊழல், மோசடி தொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமவும், இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவும் அடித்துக் கொள்கிறார்கள். இந்த ஊழல் மோசடியில் தொடர்புப்பட்ட ஒருவர் அமைச்சர் மஹிந்தானந்தவுடனேயே தான் டீல் செய்ததாக கூறுகிறார்.

பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, தானே இந்த நாட்டுக்கு சொந்தக் காரர் என நினைத்துக் கொண்டிருக்கிறார். மாகாண சபைகளுக்கான ஆயுட் காலங்கள் நிறைவடைந்துள்ளன. முடிந்தால் மாகாண சபைகளுக்கான தேர்தலை அரசாங்கம் நடத்த வேண்டும். இதனை நான் சவாலாகவே கூறுகிறேன் எனவும் தெரிவித்தார்.

# நிபுணர்களின் கருத்துகளை செவிமடுக்க வேண்டும்

பா.நிரோஸ்

நிபுணர்களின் கருத்துக்களுக்கு எதிர்க்கட்சியினர் செவிமடுக்க வேண்டும். நாட்டுக்கு அவசியமான புதிய கொள்கை ஒன்றையும் உருவாக்க வேண்டும் என அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் நேற்று (22) கலந்துகொண்டு உரையாற்றிய அவர், எதிர்க்கட்சி, நிபுணர்களின் கருத்துகளை செவிமெடுக்க வேண்டும். நாட்டை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து நாட்டுக்கு அவசியமான புதிய கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். நாடு மோசமான நிலையில்



இருக்கிறது. இந்தக் காலத்தில் கொரோனா வைரஸ் பரவலும் ஏற்பட்டுள்ளதால் நாட்டுக்கு கிடைத்து வந்த வருமானம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது. இவ்வாறான நிலையில் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

# சுகாதார வழிகாட்டல்களை மீறியே, மஹிந்த ராஜபக்ஷ கிண்ணம் இடம்பெற்றது

பா.நிரோஸ்



புதிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை மீறியே, மஹிந்த ராஜபக்ஷ கிண்ணக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டி நடைபெற்றதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் குற்றம் சுமத்தியுள்ளார்.

சபாநாயகர் தலைமையிலான நேற்றைய (22) பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டங்களுக்கு வந்தவர்கள் பொலிஸாரால் திருப்பியனுப்பட்டனர். நாட்டின் தற்போதைய நிலையில் போராட்டங்களை நடத்தி மக்களை ஒன்று கூட செய்வதால் கொரோனா வைரஸ் பரவும் என விளையாட்டுத்துறை அமைச்சர் உள்ளட்ட அமைச்சர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர் என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு இரு நாள்கள் முன்பாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் புதிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல் வெளியிடப்பட்டிருந்தது. இதில், விளையாட்டுப் போட்டிகளை நடத்த முடியும். ஆனால், விளையாட்டுப் போட்டிகளை பார்வையிடுவதற்கு பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்க முடியாது என குறிப்பிடப்பட்டிருந்தது.

கொழும்பு, குதிரை பந்தயத்திடல் அரங்கில் நடைபெற்ற மஹிந்த ராஜபக்ஷ கிண்ண கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதில் சுமார் 5 ஆயிரம் பார்வையாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை, காலியில் நேற்று நடைபெற்ற இலங்கை - மேற்கிந்திய தீவுகளுக்கான டெஸ்ட் போட்டியை பார்வையிடுவதற்கு பார்வையாளர்களுக்கு அனுமதியில்லை. நாட்டில் ஏன் இரு சட்டங்கள்? ஒருவேளை இந்தப் போட்டிக்கும் மஹிந்த ராஜபக்ஷ கிண்ணம் என்று பெயர் வைத்திருந்தால் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டிருப்பார்களா? எனவும் கேள்வி எழுப்பினார்.

\எனினும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணான்டோ புள்ளே இந்த கேள்வி பொருத்தமற்றது எனக் கூறி பதில் வழங்க மறுத்தார்.

நைட்ரிஜன் உர மோசடி

# எனக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை

பா.நிரோஸ்

நனோ நைட்ரிஜன் உர இறக்குமதியில் இடம்பெற்றதாகக் கூறும் மோசடியில் தனக்கு எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (22) அமர்வில் கலந்துகொண்டு சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்வாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கடந்த வார பாராளுமன்ற அமர்வில் உரையாற்றியிருந்த ரோஹினி கவிரத்ன எம். பி, நனோ நைட்ரிஜன் உர இறக்குமதியில்



ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருந்ததாகவும், அதில் எனக்கு தொடர்பிருப்பதாகவும் குற்றம் சுமத்தியிருந்தார்.

நனோ நைட்ரிஜன் உரத்தை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து, அதனை விவசாயிகளுக்கு விநியோகிக்கும் செயற்பாடுகளை அரசாங்க நிறுவனமான கொழும்பு கொமர்ஷல் உர கம்பனியே முன்னெடுக்கிறது.

இந்த உர இறக்குமதியில் மோசடிகள் நடந்திருந்தால் அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அரசாங்கம் சார்பில் தான் சி.ஐ.டியினருக்கு அறிவித்துள்ளேன். இந்த மோசடி தொடர்பில் எதிர்க்கட்சியினருக்கு ஆதாரபூர்வமான தகவல்கள் இருந்தால் அதனை சி.ஐ.டியினருக்கு வழங்க வேண்டும்.

ரோஹினி கவிரத்னவின் உரை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறல்களை ஆய்வு செய்வதற்கான குழு விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். அவரது உரை ஹன்சாட்டில் இருந்து நீக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# சாருக்கும் அரசாங்கத்துக்கும் பைத்தியம்

பா.நிரோஸ்

சாருக்கும், தற்போதைய அரசாங்கத்துக்கும் பைத்தியம் பிடித்திருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் நேற்று (22) கலந்துகொண்டு உரையாற்றிய அவர், சிஸ்டத்தை மாற்றுவதாகக் கூறிகொண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, டட்லி சிறிசேனவிடம் அடிபணிந்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்றே நாட்டின் தற்போதைய நிலைக்குக் காரணம் என கூறுகிறார்கள். உலக க்நாடுகள் அனைத்தும் கொரோனா வைரஸ் நெருக்கடிக்கு முகங் கொடுத்திருந்தன. எந்த நாட்டிலாவது சமையல் எரிவாயு



உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களுக்கு வரிசைகளில் மக்கள் காத்திருக்கிறார்களா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அல்லாஹ்வே ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி எனக் கூறிய ஞானசார தேரரை ஒரே நாடு, ஒரு சட்டத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறான நிலையில், நாட்டில் எப்படி இனங்களுக்கு இடையில் அமைதி உருவாகும் எனவும் கேள்வி எழுப்பினார்.

சிஸ்டத்தை மாற்றுவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி டட்லியிடம் அடிபணிந்துள்ளார். உரப் பிரச்சினையால் நுவரெலியாவில் மரக்கறி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அடுத்த வருடம் ஜனவரி மாதம் வரும்போது சாப்பிடுவதற்கு வழியில்லாதுபோகும் எனவும் எச்சரித்தார்.

இரசாயன உரத்துக்கு தடை விதிப்பது நல்ல விடயம். ஜனாதிபதி நல்லதையே செய்ய முயற்சிக்கிறார். ஆனால் எதையும் செய்வதற்கென்று ஒரு முறையொன்று இருக்கிறது எனவும் தெரிவித்தார். விவசாயிகள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் எனத் தனக்கு வாக்களித்தவர்களையே அரசாங்கம் முதலில் கஸ்டத்தில் தள்ளியுள்ளது என்றார்.

# போதைப்பொருளுடன் 12 பேர் கைது

## 26ஆம் திகதி வரை விளக்கமறியல்

வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிதிகம பிரதேச சுற்றுலா விடுதியில் நேற்றுமுன்தினம் (21) இரவு பொலிஸார் சுற்றிவளைத்த போது 12 சந்தேக நபர்களை போதைப்பொருளுடன் கைது செய்துள்ளனர். இந்த விருந்து, இணையத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேலும், இதன்போது, 01 கிராம் 625 மில்லி கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளுடன் 6 சந்தேகநபர்களும், 01 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 2 சந்தேகநபர்களும், மூன்று கிராம் 600 கிராம் கேரள கஞ்சா, 2 கிராம் 25 கிராம் க்ருஸ் போதைப் பொருளுடன் 2 சந்தேக நபர்களும் ஒரு கிராம் 700 மில்லி கிராம் ஹேஸ் ரக போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் அம்பாறை, தல்பே, மெதகம, மாத்தறை, தனமல்வில, திஸ்ஸமஹாராம, கோனபினுவெல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 30 முதல் 45 வயதுக்குட்பட்டவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்கள் மாத்தறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மாத்தறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னாரில் ஜெலட்டின் குச்சிகள் பறிமுதல்

மன்னாரில் 8 ஆயிரம் ஜெலட்டின் வெடிமருந்துக் குச்சிகளை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். மன்னார் கடற்கரையில் பதுக்கி வைத்திருந்த 40 பார்சலில் 8 ஆயிரம் ஜெலட்டின் வெடிமருந்து குச்சிகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.



ஜெலட்டின் குச்சிகளை தமிழகத்தில் இருந்து கடத்தி வந்ததாகவும், இதுதொடர்பான கடத்தல்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி தமிழக பொலிஸாரிடம், பொலிஸார் வலியுறுத்தினர்.

பாக்ஜலசந்தி கடல், மன்னார் வளைகுடா கடல் வழியாக இராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்ட கடலோரத்தில் இருந்து ஜெலட்டின் குச்சிகளை மன்னாருக்கு கடத்தி சென்றிருக்க கூடும்.

சமீப காலமாக இந்திய கடற்படை, கடலோர கடற்படை, தமிழக சட்டம் ஒழுங்கு பொலிஸார், உளவு பிரிவு பொலிஸார் இடையே ஒருங்கிணைப்பு இல்லாததால் தமிழக, இலங்கை கடத்தல்காரர்கள் போதைப்பொருள், வெடி மருந்து, தங்க கட்டிகளை இரு பகுதிகளிலும் அச்சமின்றி கடத்துவது தொடர்கிறது.

# மற்றுமொரு தொகை பைஸர் தடுப்பூசிகள் வந்தன

தற்போது இலங்கையில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதேவேளை, அரச மருந்தாக்கலல் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட 15 இலட்சம் பைஸர் தடுப்பூசிகள் நாட்டுக்கு நேற்றுத் திங்கட்கிழமை காலை கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்தத் தடுப்பூசிகள் நெதர்லாந்தில் இருந்து டுபாய் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு நேற்று அதிகாலை கொண்டுவரப்பட்டுள்ளன.




தற்போது கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள போதும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவதாகவும் சுகாதார சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் குறித்த தடுப்பூசிகள் தற்போது இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் களஞ்சியப்படுத்தப்பட்டு உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆயுதம் தாங்கிய முப்படையினரும் உஷார்

நாட்டின் அனைத்து ஆயுதம் தாங்கிய முப்படையினருக்கும் அழைப்பு விடுக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார்.

திங்கட்கிழமை முதல் அமலாகும் வகையில் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் அனைத்து நிர்வாக மாவட்டங்கள், அதனுடன் தொடர்புடைய கடற்பரப்புகளில் பாதுகாப்பைப் பேணுவதற்காக இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 தாக்குதலைத் தொடர்ந்து, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆயுதம் தாங்கிய படையினரை அமைதியை பேண அழைப்பு விடுத்து விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தார்.

ஒரு மாத காலத்துக்கு அமலாகும் வகையில் ஒவ்வொரு மாதமும் 22ஆம் திகதி இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பட்ஜெட்டில் பாகுபாடு காட்டவில்லை

பா.நிரோஸ்

வரவு- செலவு திட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது எனத் தெரிவித்த நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் ஒரேயளவான நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

வரவு- செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் நேற்று (22) பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், பட்ஜெட்டில் வடக்குக்காக எதுவும் இல்லை என்று வடக்கின் பிரதிநிதிகள் கூறியிருந்தனர். ஆனால் நாங்கள் முழு நாட்டையும் ஒரே நாடாகவே பார்க்கின்றோம். இதன்படி நாட்டிலுள்ள அனைத்து கிராம சேவக பிரிவுகளுக்கும் ஒரே அளவில் நிதியை ஒதுக்கியுள்ளோம் என்றார்.

வடக்கு, கிழக்கு மக்கள் எங்களுக்கு வாக்களிக்கிறார்களா என பார்ப்பதில்லை. அனைவரையும் இலங்கையர்களாகவே பார்க்கிறோம். நாட்டில் பெய்த கடும் மழையால் மரக்கறி விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மழை குறைந்தவுடன் பயிர்ச்செய்கை திட்டம் ஒன்றை ஆரம்பிப்போம் என தெரிவித்தார்.


மாவீரர் நாள் அனுஷ்டிப்புகளை

# தடுக்க முடியாது

■ கனகராசா சரவணன்

மாவீரர் கல்லறைகள் உன்னதமானவை, அதைவிட மகத்தானது தமிழர்களின் எழுச்சிமிகு உணர்வுகள் என்று குறிப்பிட்டிருக்கும் தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிசாந்தன், மாவீரர்களுக்கு அவர்களின் உறவுகளால் தாயகம், தமிழகம், புலம்பெயர் தேசங்களிலுள்ள துயிலும் இல்லங்களிலும், பொது இடங்களிலும், வீடுகளிலும் உணர்வுபூர்வமாக சுடரேற்றி நினைவஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும் இதை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார். அவர், நேற்று (22) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டு இருப்பதாவது:

எமது இனத்தின் விடுதலைக்கான எழுச்சிமிகு போராட்டம் மௌனிக்கப்பட்டு பன்னிரெண்டு ஆண்டுகளைக் கடந்த போதும் மாவீரர்களின் கல்லறைகளை இலங்கை அரசு இடித்தொழிக்கும் செயற்பாடுகள் இன்னும் நிறைவுக்கு வரவில்லை. இதனை, மன்னார் ஆட்காட்டி துயிலும் இல்லத்தின் உடைப்பு வெளிப்படையாகவே எடுத்துக்காட்டுகின்றது. இதனை தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை வன்மையான கண்டிக்கிறது.



இலங்கை இராணுவத்தினதும், அரச, இராணுவ புலனாய்வாளர்களதும் மிலேச்சத்தனமான செயற்பாடாக தொடர்வது, ஏற்கெனவே இடித்தொழித்த துயிலுமில்ல கல்லறைகளின் சிறு பாகங்களை கூட ஒவ்வோர் ஆண்டும் தொடர்ச்சியாக உடைத்தெறியும் செயற்பாடுகள் தொடர்கின்றன.

தமிழ்த் தேசிய பரப்பில் முன்னின்று செயற்படும் செயற்பாட்டாளர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் ஆதரவாளர்களையும் தொடர்ந்தும் அச்சுறுத்துவதும், பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினர் கொழும்புக்கு அழைத்து மிரட்டுவதும் தொடர்கிறது.

பொலிஸார் மூலமாக தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்து, அதன் மூலமாக நினைவேந்தல்களுக்கான தடையுத்தரவுகளையும் பெறுவதும், அச்சுறுத்துவதுமாக அரசின் மிலேச்சத்தனமான அராஜகங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

உங்களுக்கு வேண்டுமென்றால் ஒவ்வோர் ஆட்சியும் ஆட்சியாளர்களும் மாறும் போது இது புது புது விடயங்களாகத் தென்படலாம். ஆனால் எங்களுக்கு இவ்விடயங்கள் அனைத்தும் பழகிய ஒன்றுதான். எனவே தமிழர்களாகிய நாம் எக்காலத்திலும் இவற்றைக் கண்டு அஞ்சப்போவதில்லை என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் காவலில் உயிரிழந்த

# இளைஞனின் உடலில் 31 காயங்கள்

■ வா.கிருஸ்ணா



மட்டக்களப்பில் பொலிஸ் காவலில் உயிரிழந்த விதுசன் என்ற இளைஞனின் உடலில் 31 காயங்கள் இருந்ததாக, நீதிமன்ற விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையிலிருந்து தெரியவந்துள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார்.

கடந்த ஜுன் மாதம் 03ஆம் திகதி இருதயபுரம் கிழக்கு பகுதியில் உள்ள வீட்டில் போதைப்பொருள் வைத்திருந்ததாக தெரிவித்து, நள்ளிரவில் கைதுசெய்யப்பட்டிருந்த இளைஞன், பொலிஸ் காவலில் இருந்தபோது உயிரிழந்திருந்தார்.

குறித்த இளைஞன், ஐஸ் போதைப்பொருள் பக்கெட்டை விழுங்கியதால் அது வயற்றினுள் வெடித்து உயிரிழந்துள்ளதாக பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

அதனை குறித்த இளைஞனின் குடும்பத்தினர் மறுத்திருந்ததுடன் குறித்த இளைஞனை பொலிஸார் தாக்கியதாலேயே உயிரிழந்திருந்ததாக தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், இளைஞனின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டு, இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக பேராதனை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில், நீதிபதி ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் நேற்று (22) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போதே, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அதில் விதுசனின் உடலில் 31 வகையான காயங்கள் அறியக்கிடைத்துள்ளதாகவும் உயிரிழந்த இளைஞர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார்.

பொலிஸார் தெரிவித்த விடயங்களுக்கு மாறான சம்பவம் குறித்த இளைஞனுக்கு பொலிஸ் காவலில் நடைபெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தாகவும் தெரிவித்த அவர், வழக்கு எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் ஒத்துவைக்கப்பட்டுள்ளது என்றார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையில்

# குருதி பற்றாக்குறை

■ வா.கிருஸ்ணா

கல்முனை ஆதார வைத்தியசாலையில் பாரியளவில் இரத்தப் பற்றாக்குறை நிலவுவதாக கல்முனை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியின் வைத்தியர் எஸ். திலக்ஷி தெரிவித்தார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையினை தீர்க்கும் வகையில் இரத்ததான முகாம்களையும் நடத்துமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கோட்டைக்கல்லாறில் நேற்று (22) இரத்ததானமுகாம் நடத்தப்பட்டது.

கோட்டைக்கல்லாறு சமூக உயர்கல்வி சேவைகள் சங்கத்தின் ஏற்பாட்டில், கல்முனை ஆதார வைத்தியசாலை இரத்தவங்கியின் வைத்தியர் எஸ்.திலக்ஷி தலைமையிலான குழுவினரால் இந்த இரத்ததானமுகாம் கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

புலம்பெயர் மக்களின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட இரத்ததான முகாமில் பெருமளவான இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு இரத்தம் வழங்கியதை காணமுடிந்தது.

தற்போது நாட்டில் நிலவும் கொரனா தொற்று சூழலில் வைத்தியசாலைகளில் இரத்தப்பற்றாக்குறை நிலவிவரும் நிலையில் இவ்வாறான இரத்ததானமுகாம்கள் ஊடாக இரத்தப்பற்றாக்குறையினை ஓரளவு நிவர்த்திசெய்யமுடியும் என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.



# முன்னாள் எம்.பி உட்பட ஐவருக்கு தடையுத்தரவு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நீதிமன்ற எல்லைக்குள் யுத்தத்தினால் மரணித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை நினைவு கூருவதற்கு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், ஆதரவாளர்கள் உட்பட 5 பேருக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் ஒன்றிணைப்பின் கிழக்கு மாகாண தலைவர் சிவயோகநாதன் சீலன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், முன்னாள் கிழக்கு மாகாணசபை பிரதி தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தீவிர ஆதரவாளர் யோகராசா தர்மிதன் ஆகியோருக்கே தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டவர்களுடன் அவர்கள் சார்ந்த உறுப்பினர்களால், விடுதலைப் புலிகளின் அமைப்பில் மரணித்தவர்களுக்கு விளக்கேற்றி நினைவு கூர இருப்பதாக நம்பகரமான தகவல் கிடைத்துள்ளதாகவும், அவர்களுக்கு எதிராக 1979ஆம் ஆண்டின் 15 ம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்ட கோவை (106)1, (106)2, பிரிவின் கீழ் தடை உத்தரவு கோரி மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி பி.கே.பி. ஹெட்டியாராச்சி நீதிமன்றில் சமர்பித்தார். இந்தக் கோரிக்கையை பரிசீலித்த நீதிமன்றம், மேற்குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராக, கடந்த 19ஆம் திகதியில் இருந்து எதிர்வரும் 27ஆம் திகதி இரவு வரை நினைவேந்தலில் ஈடுபட தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

# விபத்தில் இளைஞன் பலி

■ எம்.றொசாந்த், எஸ் தில்லைநாதன்



வடமராட்சி, மந்திகை பகுதியில், நேற்று முன்தினம் (21) இரவு 8 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், 22 வயது இளைஞன், ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் இளம் வீரரான கண்ணன் காந்தன், என்பவரே உயிழந்தவர் ஆவர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதிலேயே, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



# சகதியால் அவதி...

■ எம். றொசாந்த்



சரவணை - ஊர்காவற்துறை வீதி புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வரும் வேளையில், புனரமைப்பு பணிக்காக வீதியில் போடப்பட்ட மண், மழை காரணமாக சகதியாக மாறியுள்ளது.

இதனால், அப்பகுதியில் பயணிப்பவர்கள் கடும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாக, பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட நடந்து செல்வோர் பெரும் இன்னல்களை எதிர் கொண்டுள்ளனர்.

இதேவேளை, வீதியில் சைக்கிள், மோட்டார் சைக்கிளில் செல்பவர்களும், சகதிக்குள் சிக்கி விபத்துகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

எனவே விரைந்து புனரமைப்புப் பணிகளை முடிக்குமாறும் இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துமாறும், அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

# சிசு உட்பட 14 பேருக்கு கொரோனா

■ எஸ் தில்லைநாதன்

வடக்கு மாகாணத்தில், பிறந்து 10 நாள்களேயான சிசு உட்பட 14 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில், 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, 212 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனையில், குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# விஜயம்...



ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினர், அம்பாறை மாவட்டத்துக்கு ஞாயிற்றுக்கிழமை (21) விஜயம் செய்தனர். இவ்விஜயத்தின்போது, கட்சியின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து, எதிர்காலத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடினர். (பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர்)

# திருட்டு; இருவர் கைது

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணத்தில், வீடு உடைத்து திருட்டில் ஈடுபட்ட இருவர், சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் இருந்து நகைகளும் பணமும் மீட்கப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி, யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத் தெருப் பகுதியில், வீடொன்று உடைக்கப்பட்டு, ஆறு பவுண் நகையும் ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டிருந்தது.

இதையடுத்து, சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்களால் முறையிடப்பட்டிருந்தது. முறைப்பாடு தொடர்பில் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில், குருநகர் பகுதியைச் சேர்ந்த 22, 28 வயதுகளையுடைய இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து, ஆறரைப் பவுண் நகை, ஒரு தொகைப் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஞானசார தேரரின் கருத்து

# முடிச்சுப் போடுவதாக அமைந்துள்ளது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



விளக்கேற்றக் கேட்கும் தமிழ் அரசியல்வாதிகள், போதைப்பொருளைத் தடுப்பதற்கு தயாராக இல்லை எனவும் பாராளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதிகள் என்ன செய்கின்றார்கள்? என்றும் 'ஒரே நாடு- ஒரே சட்டம்' செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ள கருத்து, மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாக அமைந்துள்ளது என, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், நீதிமன்றத்தை மதிக்கத் தெரியாது, இந்த நாட்டின் நீதித்துறையையே அவமதித்த மிலேச்சத்தனமான இனவாதியான ஞானசார தேரர், போதைப்பொருள் ஒழிப்புக் குறித்துப் பேசுவது நகைப்புக்கிடமானதாகவே உள்ளது என்றார்.

மாவீரர்களை நினைவேந்துவது தமிழர்களின் உயிர்ப்போடும், உணர்வோடும், கலாசார மரபியல்களோடும் இரண்டறக் கலந்த நிகழ்வு. அந்த நினைவேந்தலுக்கான உரிமை மறுக்கப்படுகிறபோது அதற்கெதிராய் குரல் கொடுப்பதென்பது தன்னியல்பு எனவும் கூறினார்.

தமது உரிமைக் கோரிக்கைக்கு செவிசாய்க்கவே தயாராயில்லாத, எந்நேரமும் இனவாதத்தைக் கக்கும் ஞானசாரதேரரின் இத்தகைய கருத்து, அதிலும் குறிப்பாக மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாளில் அவர் தெரிவித்துள்ள இக்கருத்து, தமிழர்களின் உணர்வுகளை சீண்டிப்பார்ப்பதாகவே அமைந்துள்ளது என்றார்.

தனியான சைக்கிள் ஓடுபாதை

# மாணவர்களிடம் மட்டு. மேயர் உறுதி

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு நகரில் பாடசாலை நாள்களில் பயணம் செய்ய, சைக்கிள் ஓடுபாதை அமைத்துத் தரும் படி மாணவர்கள் விடுத்த கோரிக்கை தொடர்பில், உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஏற்பாடுகளை முன்னெடுத்துத் தருவதாக மாநகர மேயர் தியாகராசா சரவணபவன், மாணவர்களிடம் உறுதியளித்துள்ளார்.

இந்த ஓடு பாதையினை முதல் முறையாக மாநகர பகுதியில் அமைத்து தருமாறு கோரி, சைக்கிளில் பாதுகாப்பான பயணம் ஒன்றினை மேற்கொண்ட மாணவர்கள், குறித்த வேண்டுகோளை மாநகர மேயரிடம் முன்வைத்தனர்.

அதன்போது, வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம்,



போக்குவரத்து திணைக்களம் ஆகியோருடன் கலந்தாலோசித்து அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துத் தருவதாக மாநகர மேயர் மாணவர்களிடம் உறுதியளித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றால்

# இலங்கைக்கு விடிவுகாலம்

## இராதா எம்.பி தெரிவிப்பு

■ நீலமேகம் பிரசாந்த்

இலங்கை தற்போது பொருளாதாரம் உட்பட அனைத்து விடயங்களிலும் பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன், இதற்கு தீர்வு கிடைக்க வேண்டுமானால் அது சர்வதேச நாணய நிதியத்தால் மாத்திரமே முடியும் என்றார்.



தலவாக்கலை, லிந்துலை வட்டார தோட்ட கமிட்டி தலைவர்களுடனான சந்திப்பின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

மேலும் தெரிவித்த அவர், இலங்கை ஜனாதிபதி, பிரதமரின் எதேச்சதிகாரமும் இராணுவ போக்குமே நாடு, இந்நிலைக்கு போகக் காரணமாக அமைந்துள்ளது.

இதேநிலைமை தொடருமானால், நாட்டில் முன்னர் ஏற்பட்ட பஞ்சம் நிறைந்த சூழலுக்குச் செல்ல வேண்டிய அபாயம் ஏற்படும். இதற்கு ஒரே தீர்வு, சர்வதேச நாணய நிதியத்தோடு இலங்கை ஒப்பந்தங்களை ஏற்படுத்தி கொள்ள வேண்டும். அப்படி ஒப்பந்தங்கள் செய்துகொள்ளும் பட்சத்தில் மனித உரிமைகள் மீட்கப்படும், நாடு இராணுவமயமாகாமல் இருப்பதற்குத் தீர்வு கிடைக்கும்.

அது மட்டுமல்லாமல் பொருளாதார ரீதியிலும், பல உதவிகளை இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக கிடைக்கப்பெறும். இவ்விடயம் தெரிந்தும் இலங்கை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை புறக்கணித்து வருகின்றனர். இது நல்லதுக்கு அல்ல; நாட்டிற்கு விடிவுகாலம் கிடைக்க வேண்டுமென்றால், இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவது தப்பில்லை எனவும் தெரிவித்தார்.

ஒரு வாரத்தில்

# பதுளையில் 16 பேரை கொரோனா கொன்றது

■ பாலித ஆரியவன்ஸ

கொரோனா தொற்றுக்குள்ளாகி, பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில், இந்த மாதம் 16ஆம் திகதியிலிருந்து நேற்று (22) வரை, 16 பேர் உயிரிழந்துள்ளனர் என, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பதுளை கிளையின் தலைவர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களுள் 14 வயது சிறுமியும் அடங்குவதாகத் தெரிவித்துள்ள அவர், 16ஆம் திகதி ஐவரும் 18ஆம் திகதி மூவரும், 21ஆம் திகதி ஐவரும் நேற்று (22) மூவரும் உயிரிழந்துள்ளனர் என்றார்.

உயிரிழந்தவர்கள் 14, 25,40, 36, 87 ஆகிய வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் இவர்கள் எல்ல, பதுளை, மடுல்சீமை, பண்டாரவளை, வெல்லவாய, ஹாலிஎல, மீகஹாஹிக்கவுல, வெலிமடை, கந்தகெட்டிய, மஹியங்கனை, உடப்புஸல்லாவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தார்.



நுவரெலியா பொருளாதார மத்திய நிலையம்

# மீண்டும் திறப்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

போதியளவில் மரக்கறிகள் கிடைக்காமை, நுவரெலியா பிரதேச மரக்கறி உற்பத்தியாளர்கள், விவசாயிகள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு போன்ற காரணங்களால், நேற்று முன்தினம் (21) தற்காலிகமாக மூடப்பட்ட நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையம், நேற்று (22) மீண்டும் திறக்கப்பட்டது.

எனினும், கிடைக்க வேண்டிய மரக்கறிகளின் எண்ணிக்கை, 20 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலைய ஒன்றியத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நுவரெலியா பிரதேசத்திலுள்ள மரக்கறி உற்பத்தியாளர்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்துக்கு அரசாங்கம் விரைவில் பதிலளிக்க வேண்டும் என்றும் இல்லையேல் எதிர்வரும் நாள்களில் நாடு பூராகவும் உள்ள பொருளாதார மத்திய நிலையங்களை திறப்பதா, இல்லையா என்பது தொடர்பில், தீர்மானிக்க வேண்டிவரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தாவர ஊட்டச்சத்துகள் இறக்குமதி குறித்து, விவசாய அமைச்சின் செயலாளர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளமை தொடர்பில், நாட்டிலுள்ள விவசாயிகள் பாரிய எதிர்பார்ப்புடன் இருப்பதாகத் தெரிவித்த அவர், அரசியல்வாதிகளை விட அமைச்சின் செயலாளர்களின் கருத்துகளை நம்பமுடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இராகலை தீ விபத்துச் சம்பவம்:

# சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிப்பு



■ ஆ.ரமேஸ்

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இராகலை, இலக்கம் -01, மத்திய பிரிவு தோட்டத்தில் தனி வீட்டில் இடம்பெற்ற தீ விபத்தில், ஐவர் பலியான சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள, தங்கையா இரவிச்சந்திரனின் விளக்கமறியல் நான்காவது முறையாகவும் மேலும் 14 நாள்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு விசாரணை, வலப்பனை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி டி.ஆர் ஜினதாச முன்னிலையில் நேற்று (22) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேக நபரான தங்கையா இரவிச்சந்திரன் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை.

சந்தேகநபர் பதுளை சிறைச்சாலை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் நீதவானிடம் தெரிவித்ததுடன், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, சந்தேக நபரை மன்றிற்கு அழைத்து வரவில்லை எனவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில், வலப்பனை நீதிமன்றத்தில் இருந்து குறித்த சந்தேகநபருடன் 'ஸ்கைப்' ஊடாக, நீதிபதி தொடர்பு கொண்டு, விசாரணை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், குறித்த வழக்கு விசாரணை தொடர்பில் இராகலை பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

அதேநேரத்தில், தீ சம்பவம் குறித்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, இராகலை பொலிஸாரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அறிக்கை, நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

நோனாத்தோட்ட வீடமைப்புத் திட்டத்துக்கு

# நீரைப் பெற்றுத்தர உறுதி

■ பா.பாலேந்திரன்

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் ஊடாக, லிந்துலை, நோனாத்தோட்ட புதிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 25 வீடுகள், நல்லாட்சியில் நிர்மாணிக்கப்பட்டு வந்தன. எனினும், ஆட்சி மாற்றம் காரணமாக இதன் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டன.

அத்துடன், ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கான நீர் வசதி இன்மையால் வீட்டுப்பயனாளிகள் பெரும் அவதியுற்றனர்.

எனினும், கட்டி முடிக்கப்பட்ட வீடுகளுக்கு நீர் வசதிகளைத் தேசிய நீர் வழங்கல் அமைச்சின் ஊடாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில், நீர்வழங்கல் அமைச்சின் நுவரெலியா மாவட்ட இணைப்பு செயலாளர் ஜோதிவேல் கவனத்திற்கு கொண்டுச் சென்றதையடுத்து, சம்பந்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்தை, நேற்று முன்தினம் (21) பார்வையிட்டதுடன் இவ்வீடமைப்புத் திட்டத்திற்கு தேசிய நீர் வழங்கல் அமைச்சின் ஊடாக நீர் பெற்றுத்தருவதாக உறுதியளித்துள்ளார்.



கண்டி பொலிஸ் தலைமையகத்துக்குள்

# நுழைந்த கொரோனா

■ செஹ்ன் செனவிரத்ன

கண்டி பொலிஸ் தலைமையகத்தின் வரவேற்பு பிரிவின் அதிகாரியொருவருக்கும் கணினிப் பிரிவின் அதிகாரியொருவருக்கும் கொரேனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த இருவருக்கும் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போதே, தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த இரண்டு அதிகாரிகளுடனும் நெருங்கிய தொடர்பில் இருந்த 20 பேர், பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் அவர்களில் எவருக்கும், தொற்று உறுதி செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.














# மீண்டும் ஆரம்பம்

நாடளாவிய ரீதியில் நேற்று (22) சகல பாடசாலைகளிலும் தரம் 6 தொடக்கம் 9ஆம் தரம் வரையான சகல வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கமைய நுவரெலியா, ஹட்டன், பதுளை, பசறை, பண்டாரவளை, ஹப்புத்தளை உள்ளிட்ட பல இடங்களிலும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தந்ததுடன், அதற்கான நடவடிக்கைகள் பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. (மலையக நிருபர்கள்)

# பட்டினியை நோக்கிய பயணத்தின் அச்சம் சூழ்கொண்டுள்ளது

மீண்டுமொரு தடவை நாடு முடக்கப்பட்டுவிடுமோ என்னும் பேரச்சம், பெரும்பாலானவர்களின் மனங்களில் சூழ்கொண்டுவருகின்றது. கொரோனா தொற்றாளர்களின், மரணங்களின் எண்ணிக்கைகளில் சடுதியான அதிகரிப்பு, அவ்வாறான பேரச்சத்துக்குக் காரணங்களாக அமைந்துள்ளன.

அவ்விரு காலப்பகுதிகளிலும் வீடுகளுக்குள்ளே முடங்கியிருந்த மக்களில் பெரும்பாலானவர்கள், அரைவயிறும் கால்வயிறும் உண்டு, பட்டினியைப் பொறுத்துக்கொண்டு வயிற்றைக் கட்டிக்கொண்டனர். நாடு திறக்கப்பட்டதன் பின்னர், பொருட்களின் விலை அதிகரிப்பு, தட்டுப்பாடு போன்றவை, இன்னுமின்னும் வயிற்றைக் கட்டச்செய்துவிட்டன.

அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமன்றி, இதர பொருட்களின் விலைகள் 'கிடுகிடு'வென உயர்ந்து நிற்கின்றன. இதனால், ஒருவேளை உணவையேனும் தவிர்த்துக்கொள்ளவேண்டிய நிலைமைக்குள் சாதாரண மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். பால் தேநீரை மட்டுமே, ஒருவேளை உணவாக எடுத்துக்கொண்டவர்கள் அதையும் கைவிட்டுவிட்டனர்.

வழமையான உணவுகளை ஓரிரு நாள்களுக்கேனும் தவிர்த்து, மரக்கறிகளை மட்டுமே சிலர் உணவாக எடுத்துக்கொண்டனர். இன்றேல், மரக்கறி வகைகளை உணவுகளில் அதிகளவில் சேர்த்துக்கொண்டனர். பழவகைகளையும் உண்டு, ஒவ்வொரு நாள்பொழுதையும் கழித்தவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இதற்கிடையே, மரக்கறிகளுக்கான தட்டுப்பாடு அதிகரித்துவிட்டது. பொருளாதார மத்திய நிலையங்களுக்கு கொண்டுவரப்படும் மரக்கறி மூடைகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டன. இதனால், மரக்கறிகளின் விலைகள் எகிறி நிற்கின்றன.

அச்சத்தைத் தூண்டி நிற்கும் விலைவாசி உயர்வு, தட்டுப்பாடு ஆகியன பட்டினியை நோக்கிய பயணத்தின் ஆரம்பமாகவே பலரும் கருதுகின்றனர். இதற்கிடையில், பெரும்போக பயிர்ச்செய்கையாளர் பலரையும் ஏமாற்றும் வகையில், அரசாங்கத்தின் உரக்கொள்கை அமைந்திருக்கின்றது.

விவசாயத்தின் உரப்பிரச்சினையை உடனடியாகத் தீர்க்கவேண்டும். இல்லையேல் உள்ளூர் சந்தைகளில் தற்போது நிலவும் தட்டுப்பாடுகள், அதிகரித்துக்கொண்டே செல்லும். இதனால், தட்டுப்பாடுகள் நிலவும் பொருட்களின் விலைகளும் பல மடங்குகளாக எகிறிவிடும். ஆகையால், உடனடியாகத் தலையிட்டு, ஏகமனதான முடிவை, அமைச்சரவை எடுக்கவேண்டும்.

விவசாயத்தில் தன்னிறைவு அடைந்துவரும் நாடெனப் பெருமையாகப் பேசிகொண்டிருக்கும் நிலையில், ஒவ்வொரு நாளும் விவசாயிகள் வீதிகளில் இறங்கி, உர விவகாரத்தில் அரசாங்கம் கடைப்பிக்கும் கொள்கைக்கு எதிராகக் குரல் கொடுத்துவருகின்றனர். விவசாயிகளின் இந்த செயற்பாடுகள், நீண்டநாள்களுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தகூடியவையாகும்.

இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என, விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தாலும், துறைசார் அமைச்சரான மஹிந்தானந்த அளுத்கமகே, அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் இரசாயன உரங்கள், நெற்பயிர் செய்கைக்கோ, விவசாயத்துக்கோ வழங்கப்படமாட்டாதென தெரிவித்துள்ளார்.

இது, விவசாயிகளிடத்தில் பெரும் குழப்பத்தைத் தோற்றுவித்துள்ளது. பொருள்களின் விலையதிகரிப்பால் பட்டினியின் விளிம்பில் விழுந்துகிடக்கும் மக்கள், விவசாயப் பொருள்களின் தட்டுப்பாடு காரணமாக பஞ்சம், பட்டினி என்ற பாதாளத்துக்குள் விழுத்தி விடும் துர்ப்பாக்கிய நிலைமையே ஏற்படும் என்பதை ஞாபகமூட்டுகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

வெட்கம், மானம், ரோசம் அற்றவர்களிடம் நேர்மை என்பதே கிடையாது. இவர்கள், எந்தவொரு காரியத்தையும் உருப்படியாகச் செய்யமாட்டார்கள்.

மேலும், உண்மை பேசுதல் என்றால் என்னவென்றும் இத்தகையவர்களுக்குத் தெரியாது. வாக்குறுதிகளை அள்ளிவீசும் இவர்கள், அதன்படி செய்வதும் கிடையாது; வாக்குறுதிகளைக் காப்பாற்றும் உயர்ந்த மனவுறுதியும் இவர்களுக்குக் கிடையாது. கண்டபடி பிறரிடம் உதவி கேட்பார்கள். அதைப் பெற்ற பின்னர், அவர்களைக் கண்டுகொள்ளவும் மாட்டார்கள். இவர்கள் உழைத்துப் பணத்தைச் சேர்த்தாலும், சமூகத்துக்கு எதையும் செய்யமாட்டார்கள்.

வசதி வாய்ப்புகள் எல்லாமே இருந்தும், மக்களிடம் நேர்மையற்ற முறையில் நடந்துகொள்வார்கள். வெளியில் தங்களைப் பரோபகாரிகள் போல சித்திரிப்பதும் வேடிக்கை.

உலகில் எல்லாவிதமான குணவியல்புகளுடன் மக்கள் இருந்தாலும், நல்ல மனிதர்களின் வெளிப்படைத் தன்மைகளை நீங்கள் அறியமுடியும். விழிப்பான நிலை என்பது, பண்பான மனிதர்களைத் தேடி, நட்பை உருவாக்குதலாகும். மனிதர்களின் மனம் விரியும்போது, உலகத்தில் செழிப்பும் அழகும் மலரும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### திருமுறிகண்டியில் வெள்ளம்

முல்லைத்தீவு, திருமுறிகண்டி கோவில் சூழலில் தேங்கி நிற்கின்ற வெள்ளத்தை அகற்றுவதற்கு, புதுக்குடியிருப்பு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோவில் சூழலில் காணப்படுகின்ற குழிகளில், வெள்ளம் தேங்கி நிற்கின்றது. கடும் மழை நேரத்தில், கூடுதலான வெள்ளம் இப்பகுதியில் காணப்படுகின்றது. பெருமளவு வாகனங்கள், மக்கள் வந்து செல்கின்ற இக்கோவில் சூழலில், வெள்ளம் தேங்கி நிற்பது பொருத்தமற்றதாகவும் சாரதிகளுக்கும் பொதுமக்களுக்கும் மிகுந்த அசௌகரியம் தருவதாகவும் காணப்படுகின்றது.

திருமுறிகண்டியில் இருந்து வெள்ளம் வடிந்தோடுவதற்கான வாய்க்கால் வசதிகள் உருவாக்கப்படாததன் காரணமாகவே, வெள்ளம் குழிகளில் தேங்கி நிற்கும் நிலைமை காணப்படுகின்றது. குழிகளில் கிரவல் அல்லது சல்லிக் கற்கள் பரவ வேண்டும் என திருமுறிகண்டி வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு குழிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால், டெங்கு போன்ற அபாய நோய்கள் ஏற்படுவதற்கான சூழல் காணப்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். பெருமளவு மக்கள் வந்து செல்லும் இவ்விடத்தில் மழை வெள்ளத்தினை அகற்றுவது அவசியமானதாகும் என்பதால், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நடராசா கிருஸ்ணகுமார்



## முஸ்லிம்களின்
# அடுத்த தலைவர் யார்?

மொஹமட் பாதுஷா

ஒரு நாடு என்றாலும் சரி, சமூகம் என்றாலும் சரி, அடுத்தடுத்த அரசியல் தலைவர்கள் உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதனை 'தலைமைத்துவச் சங்கிலி' எனலாம். ஆனால், தற்காலத்தில் தமிழர்களின் அரசியலிலும் முஸ்லிம்களின் அரசியலிலும் தலைமைத்துவச் சங்கிலி ஒன்று உருவாக்கப்பட்டு இருப்பதாகத் தெரியவில்லை.

குறிப்பாக, முஸ்லிம் அரசியலில் தலைமைத்துவச் சங்கிலி என்ற ஒன்றே, இல்லாமல் போயிருக்கின்றது. முஸ்லிம்களின் அடுத்த தலைவர், யாராக இருக்கப் போகின்றார் என்பது, நம்முன்னுள்ள கேள்வியாகும்.

ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் அல்லது, கணிசமான முஸ்லிம்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிகழ்கால தலைவர் யார் என்ற கேள்விக்கே துல்லியமான விடை தெரியாதுள்ளது. இந்நிலையில், அடுத்த தலைமைத்துவம் யார் என்பது பற்றிய பிரக்ஞையோ, அவ்வாறான ஒரு தலைமைத்துவத்தை வளர்த்தெடுப்பதற்கான முனைப்போ முஸ்லிம் சமூகத்திடம் கொஞ்சம்கூட இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த நிலைமை, தமிழ்ச் சமூகத்திலும் இருப்பதாகச் சொல்லலாம். தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் சுமந்திரன் எம்.பி. போன்ற மூத்த அரசியல்வாதிகளின் காலத்துக்குப் பிறகு, தமிழ்த் தேசிய அரசியலை யார் தலைமை தாங்கப் போகின்றார்கள் என்று அனுமானிக்க முடியவில்லை.

ஆனால், முஸ்லிம் சமூகத்தில்தான் இந்தத் தலைமைத்துவ வெற்றிடம், வெகுவாக உணரப்படுகின்றது. இதுவொரு பாரதூரமான நிலைமையாகும். முஸ்லிம் அரசியல் சூழலில் முதல்நிலை தலைவர்கள், இரண்டாம் நிலை தலைவர்கள், அதற்கடுத்த நிலையில் உள்ளவர்கள் என்று ஒரு தலைமைத்துவச் சங்கிலி உருவாகாமல் போனதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது, தலைவர்களின் பதவி ஆசையாகும். அதாவது, நாம்தான் இந்தக் கட்சியின், சமூகத்தின் தலைவராக இருக்க வேண்டும் என்றும், முழு அமைச்சுப் பதவி உள்ளடங்கலாக பிரதானமான வரப்பிரசாதங்கள் தங்களது கஜானாவுக்குள் வந்து விழ வேண்டும் என்ற எண்ணமாகும்.

இரண்டாவது, தமக்கு கீழுள்ளவர்கள் மீதான நம்பிக்கை இன்மையாகும். இரண்டாம்நிலைத் தலைவர்களை, தமக்கு அடுத்த தலைவர்களாக முன்மொழிந்தால் அவர்கள் குறுக்குவழியில் தமது தலைமைத்துவ பதவியைப் பறித்து, தம்மையே விஞ்சி விடுவார்கள் என்ற அச்சமாகும்.

மூன்றாவது, முஸ்லிம் சமூகத்தை எதிர்காலத்தில் வழிநடத்தக் கூடியவர்கள் என்று நம்பக்கூடிய அரசியல்வாதிகள் யாரும், முஸ்லிம் அரசியலுக்குள் பிரவேசிக்காமை ஆகும். இளம் அரசியல்வாதிகள் தம்மைப் புடம்போட்டுக் கொள்ளாமல், கிடைப்பதைச் சுருட்டிக் கொள்வதிலேயே குறியாக இருக்கின்ற போக்காகும். இதனை வேறு விதமாகவும் கூறலாம். அதாவது, கடந்த கால் நூற்றாண்டாக, முஸ்லிம் சமூகம் பெரும்பாலும் தலைமைத்துவப் பண்புகள் அற்றவர்களுக்கே வாக்களித்து, தங்களது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்கின்றனர்.

எத்தனையோ சமூக சிந்தனையாளர்கள், அர்ப்பணிப்புமிக்க அரசியல்வாதிகள், அறிவார்ந்த மக்கள் பிரதிநிதிகள் தோற்கடிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அதற்குப் பதிலாக, தலைவருக்கே 'ஆப்பு' சீவும் தளபதிகளும் மோசமான பழக்க வழக்கங்களைக் கொண்ட வியாபாரத்தனமான எம்.பிகளும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

அப்படியென்றால், இருக்கின்றவர்களில் ஒப்பீட்டு தெரிவு அடிப்படையில், ஒருவரைத் தலைவராக முன்னிறுத்த முடியுமே தவிர, இவர்களுக்குள் இருந்து மிகச் சரியான ஒரு தலைவரை இனம் காண முடியாது. இந்தக் குப்பைகளுக்குள் இருந்து, ஒரு குண்டுமணியை கண்டுபிடிப்பது சாத்தியமும் இல்லை.

மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப், நல்லதோர் அரசியல் தலைவராவார். அதற்கு முன்னரும் பல முஸ்லிம் தலைமைகள் இருந்தார்கள். என்றாலும், முஸ்லிம்களை ஒரு தனியினமாக அடையாளப்படுத்தும் அரசியல் சிந்தனையை, துணிச்சலுடன் முன்னகர்த்திய முதலாமவர் அவர் எனலாம்.

அவர் முஸ்லிம் சமூகத்தை எவ்வாறு நேசித்தார் என்பதையும், அவரது தலைமைத்துவப் பண்புகள் எந்தளவுக்கு மக்களைக் கவர்ந்திழுந்தன என்பதையும் நாமறிவோம். ஆனால், அவர்கூட தனக்கு அடுத்த தலைவரை பொதுவெளியில் முன்னிறுத்தி, தலைமைத்துவச் சங்கிலியை ஆரம்பித்து வைக்கவில்லை.

அவரது அகால மரணத்திற்குப் பிறகு, இரண்டாம்நிலைத் தலைவர்கள் பலர் தலைமைத்துவத்தை ஏற்கத் தயங்கியமையும், வேறுசில அரசியல்வாதிகள் அப்பதவியை 'வாயாலேயே கேட்டு'ப் பெற்றதுமே, இவ்வாறு கூறுவதற்கான காரணமாகும்.

அதாவது, தலைமைத்துவ சங்கிலி சரியாக இருந்திருந்தால், இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்காது. அஷ்ரபின் பாரியாரான பேரியலுக்கு, தனது கணவரின் அரசியல் வழித்தடம் பற்றிய பெரிய பிரக்ஞையோ உடன்பாடோ இருந்ததில்லை. ரவூப் ஹக்கீம், அப்போது சிறந்ததோர் ஆளுமையாக, கட்சிக்குள் அடையாளம் காணப்பட்டிருந்தார். என்றாலும், தனித்துவ அடையாள அரசியலோ, கிழக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகளோ அவருக்கு சரிவரத் தெரிந்திருக்கவில்லை.

தலைமைத்துவச் சங்கிலி சரியாகக் கோர்க்கப்படாமையால், ரவூப் ஹக்கீமும் பேரியல் அஷ்ரப்பும் முஸ்லிம் காங்கிரஸின் இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டார்கள். பிறகு, ரவூப் ஹக்கீம் தனித் தலைவராக பிரகடனப்படுத்தப்பட்டார். பேரியல் அஷ்ரப், தேசிய ஐக்கிய முன்னணியை கையில் எடுத்தார்.

ஆனால், சொற்ப காலத்திலேயே கட்சிக்குள் உள்ளக முரண்பாடுகள் வலுவடைந்தன. ஹக்கீமை தலைவராகக் கொண்டு வந்த அதாவுல்லா போன்றவர்களே எதிர்த்தனர். ஹக்கீம் தலைவராக இருந்தபோது, எம்.பியாக தெரிவு செய்யப்பட்ட ரிஷாட் பதியுதீன் போன்றவர்களும் விமர்சித்தார்கள்.

இதன் விளைவாக, மேலும் பல காங்கிரஸ்கள் உருவாகின. முஸ்லிம்களின் வாக்குகள் பிரிந்தன. ஊருக்குள் - ஏன் குடும்பத்திற்குள் கூட அணிகள் தோற்றம் பெற்றன. ஆகவே, துலைமைத்துவச் சங்கிலியில் உள்ள குறைபாடுதான், இதற்கு அடிப்படைக் காரணம் எனலாம்.

இன்று, பல முஸ்லிம் கட்சிகள், அரசியல் அணிகள் உள்ளன. ஆயினும், 'முஸ்லிம் சமூகத்தின் தேசிய ரீதியான அரசியல் தலைமை எது?' என்று கேட்டால், விடைசொல்ல ஒரு கணம் தடுமாற வேண்டியிருக்கின்றது.

ஏனெனில், இன்றைய உண்மை நிலைவரப்படி, முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் இருக்கின்றார்கள். அரசியல் அணிகளிற்கு தலைமை தாங்குகின்றவர்கள் இருக்கின்றார்கள். ஆனால், ஒட்டுமொத்த முஸ்லிம்களின் தலைமை என்று யாரும் இல்லை.

ரவூப் ஹக்கீமோ, ரிஷாட் பதியுதீனோ, அதாவுல்லாவோ அல்லது ஏனைய அரசியல்வாதிகளோ, தம்மை ஒரு குறிப்பிட்ட கட்சியின் தலைவர்களாக முன்னிறுத்தி இருக்கின்றார்களே தவிர, சமூகத்தின் தலைவர்களாகதத் தம்மைப் புடம்போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை.

இந்த நிலைமை, முஸ்லிம் சமூகத்தின் அடுத்த அரசியல் தலைவர் யார் என்பதைத் தீர்மானிப்பதில் மிகப் பெரிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இப்போது முஸ்லிம் அரசியல் தலைமைகள் என்று கொண்டாடப்படுகின்றவர்களில் பல குறைகள் உள்ளன.

சமூகத்தைச் சரியாகத் தலைமைதாங்கி, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவில்லை என்ற வகையான பல விமர்சனங்கள் உள்ளன. அது வேறு விடயம்!

ஆனால், அவர்களுக்குப் பிறகு வந்த முஸ்லிம் எம்.பிக்கள், மாகாண முதலமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், இவர்களை விட மோசமான பண்பியல்புகளையே கொண்டிருக்கின்றார்கள். இன்னுமின்னும் பிற்போக்குத்தனமான அரசியல் கலாசாரத்தை உருவாக்கவே முற்படுகின்றார்கள்.

தலைவர்களைக் குற்றம் சொல்லிக் கொண்டு, அவர்களை விடக் கேடுகெட்ட காரியங்களில் ஈடுபட்டு, சமூகத்தை விற்றுப் பிழைக்கின்ற எம்.பிக்களே இன்று அதிகமுள்ளனர். பழையவர்கள் அப்படியென்றால், புதிதாக பாராளுமன்றத்திற்கு, அரசியலுக்கு வந்தவர்கள், அதைவிட மோசமானவர்களாகத் தெரிகின்றார்கள்.

முஸ்லிம் அரசியல்வாதிகளிடத்தில், சமூகம் என்ற சிந்தனை மறந்து, கிடைப்பதைச் சுருட்டிக் கொண்டு போவோம் என்ற எண்ணம் மேலோங்கியுள்ளது. பணத்துக்கும் பதவிகளுக்கும் பின்னால், மக்கள் பிரதிநிதிகள் போய்விடுவதால், திருவிழாவில் தொலைந்த குழந்தைபோல, முஸ்லிம் சமூகம் நிற்கின்றது.

ஆக மொத்தத்தில், முஸ்லிம் அரசியலில் தலைமைத்துவப் பண்புகள், இறங்குமுகமாக இருக்கின்றன. இதனால், அடுத்த தலைவர் யார் என்பதை, மக்களால் அடையாளப்படுத்த முடியவில்லை.

அதேவேளை. இப்போதிருக்கின்ற தலைமைகள், தங்களது தவறுகளைத் திருத்திக் கொள்வது ஒருபுறமிருக்க, தங்களுக்கு அடுத்த நிலையில் உள்ள மக்கள் பிரதிநிதிகளை, எதிர்காலத் தலைவர்களாக சிருஷ்டிக்க வேண்டியுள்ளது. தமது கட்சியில், அணியில் உள்ளவர்களில், உண்மையில் சமூகத்திற்காக பாடுபடக் கூடிய ஆளுமையுள்ளவர் யார் என்பதை அடையாளம் காண வேண்டும்.

இப்போது, முஸ்லிம் அரசியலுக்குள் அப்படியான தகுதி தராதரங்களுடன் யாரும் இல்லாதிருக்கவும் வாய்ப்புண்டு. அப்படியென்றால், உடனடியாக வெளியில் இருக்கின்ற பொருத்தமான ஆளுமைகளை அரசியலுக்குள் உள்வாங்கி, அடுத்தடுத்த தலைவர்களை உருவாக்குவதுடன், அதை மக்களுக்கு முன்னிலைப்படுத்துவதும் அவசியம்.

இல்லையென்றால், இப்போதிருக்கின்ற ஒரு முஸ்லிம் தலைவரின் பதவி, எதிர்பாராத காரணத்தால் வெற்றிடமாகும்போது, மர்ஹூம் அஷ்ரபின் மரணத்துக்குப் பிறகு ஏற்பட்ட குழப்பங்களையும் தலைமைத்துவ வெற்றிடத்தையும் விட, பன்மடங்கு பாரதூரமான விளைவுகளை முஸ்லிம் சமூகம் சந்தித்தே தீரும்.

மூணாறு

# கள்ளக் காதலன் மீது அசிட் வீச்சு

## பார்வையை இழந்தார் காதலன்

கேரளாவிலுள்ள மூணாறு பிரதேசத்தில், கள்ளக் காதலியொருவர், கள்ளக் காதலன் மீது ஆசிட் வீசியதால், காதலன் பார்வை இழந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: திருவனந்தபுரத்தில் தாதியாக பணியாற்றியபோது நண்பரொருவருடன் பழக்கம் ஏற்பட்டது. பின்னர் அது காதலாக மலர்ந்தது. இந்நிலையில் காதலிக்கு திருமணம் முடிந்து, இரண்டு குழந்தைகள் உள்ளதாக காதலனுக்கு தெரியவந்தது. அவருடனான உறவை கைவிட்ட காதலன், வேறு பெண்ணை திருமணம் செய்யத் தயாரானார். இதையறிந்த காதலி, "காதலித்தபோது கொடுத்த பணத்தை திரும்பத் தர வேண்டும்; இல்லாவிட்டால் பொலிஸில் புகாரளிப்பேன்" என்றார்.




பேச்சுவார்த்தைக்காக காதலனை அங்கிருந்த பாலத்துக்கு அருகில் வரவழைத்தார்.

இருவரும் பேசியபோது வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த காதலி, மறைத்து வைத்திருந்த ஆசிட்டை காதலனின் முகத்தில் வீசியுள்ளார். காதலனுக்கு ஒரு கண் பார்வை பறிபோனது. அவர் திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். காதலியை பொலிஸார் கைது செய்தனர். ஆசிட் வீசியபோது காதலிக்கும் முகத்தில் காயம் ஏற்பட்டதால், அவர் கோட்டயம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்.



# நிர்வாணமாக நடிக்க வரவில்லை

பொலிவூட் திரையுலகில் முன்னணி நடிகையாக வலம்வருபவர் நடிகை ராதிகா ஆப்தே. தோனி என்ற திரைப் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார்.

இந்நிலையில் அண்மையில் இவரின் அந்தரங்கப் புகைப்படங்கள் சில இணையத்தில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இது குறித்து ஊடகமொன்றிற்கு செவ்வியளித்திருந்த ராதிகா, "இந்திய சினிமாவில் மட்டுமல்ல வெளிநாட்டு படங்களிலும் நிர்வாணமாக நடிப்பது ஒன்று தவறல்ல. நிர்வாணமாக நடிக்க வைப்பதற்காக கண்டபடி கதைகளைக் கொண்டு வந்தால் எப்படி? நிர்வாணமாகவோ கவர்ச்சியைக் காட்டவோ மட்டுமே நான் சினிமாவிற்கு வரவில்லை கதை பிடித்திருந்தால் எவ்வளவு தூரம் வேண்டமானாலும் செல்வேன்" என்றார்.

கரூர்

# வழக்கை அலட்சியப்படுத்திய இன்ஸ்பெக்டர் பணி நீக்கம்

பாடசாலை மாணவி தனதுயிரை மாய்த்துக் கொண்ட வழக்கில் அங்கு பணியாற்றிய இன்ஸ்பெக்டரை திருச்சி சரக பொலிஸ் உயர் அதிகாரி பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார்.

கரூர் அருகேயுள்ள அரசாங்க கொலனியைச் சேர்ந்த தனியார் பாடசாலை மாணவி கடந்த 19ஆம் திகதி தனதுயிரை மாய்த்துக் கொண்டார். இதற்கு முன்பாக பாலியல் தொந்தரவு காரணமாக தனதுயிரை மாய்த்துக் கொள்ளவதாக கடிதம் எழுதி வைத்திருந்தார்.

இதுகுறித்து வெங்கமேடு இன்ஸ்பெக்டர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தார்.

இன்ஸ்பெக்டர் , இவ்வழக்கில் அலட்சியமாக செயல்பட்டதாக திருச்சி சரக பொலிஸ் உயர் அதிகாரியை இன்ஸ்பெக்டரை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றிய நிலையில் இன்ஸ்பெக்டரை பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார்.



பாரபங்கி

## குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை

# வாபஸ்பெறாவிட்டால் போராட்டம் தொடரும்



வேளாண் சட்டங்களை திரும்பப் பெறுவதைப் போல், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை வாபஸ்பெறாவிட்டால் மீண்டும்போராட்டம் தொடர்ந்தும் நடக்கும் என்று ஏஐஎம்ஐஎம் கட்சியின் தலைவர் அசாசுதீன் ஒவைசி மத்திய அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம், பாரபங்கியில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஏஐஎம்ஐஎம் கட்சியின் தலைவர்அசாசுதீன் ஒவைசி பங்கேற்றார்.

அப்போது அவர் பேசியதாவது: வேளாண் சட்டங்களை திரும்பப் பெறும் முடிவு எடுத்ததைப் போல், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தையும் திரும்பப் பெற வேண்டும். அந்த முடிவு எடுக்க வேண்டும் என்று மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா அரசியல் கட்சியைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்பிஆர் மற்றும் என்ஆர்சிக்கு சட்டம் கொண்டுவந்தால், மீண்டும் சாலையில் இறங்கி போராட்டம் நடத்துவோம். இங்கு ஒரு சாஹின்பாக்கை உருவாக்குவோம். நானும்கூட இங்குவந்து போராட்டத்தில் ஈடுபடுவேன். விவசாயிகள் மத்திய அரசாங்கத்தை நம்பவில்லை. பாராளுமன்றம் தொடங்கி, வேளாண் சட்டங்களை திரும்பப் பெறும் சட்டமூலம் அறிமுகமாகட்டும் அதன்பின் முடிவு எடுப்பதாகக் கூறியுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேச தேர்தலில் 100 இடங்களில் போட்டியிட எங்கள் கட்சி முடிவு செய்துள்ளது. கூட்டணி குறித்து சில கட்சிகளுடன் பேசி வருகிறோம், விரைவில் அதுகுறித்து தெரிவிப்பேன். கூட்டணி அமைக்கிறோ அல்லது இல்லையோ நாங்கள் வெற்றி பெறுவது உறுதி. உத்தரப்பிரதேசத்தில் எங்கள் கட்சி வலுவாக இருக்கிறது. இவ்வாறு அசாசுதீன் ஒவைசி தெரிவித்தார்.



# கின்னஸ் புத்தகத்தில் இடம்

தமிழ் திரையுலகில் நடிகர், நடன இயக்குனர் எனப் பன்முகத் திறமை கொண்டவராக விளங்குபவர் கோகுல்நாத்.

மானாட மயிலாட என்கிற நடன நிகழ்ச்சி மூலம் பிரபலமான இவர் அதன் பின்னர் அம்புலி, ஆ, ஜம்புலிங்கம், மகளிர் மட்டும், ஐரா போன்ற படங்களிலும் நடித்துள்ளார்.

மேலும் தற்போது லோகேஷ் கனகராஜ் - கமல்ஹாசன் கூட்டணியில் உருவாகும் விக்ரம் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

இதுதவிர இவர், கோகுல்நாத் யூனிக் டேலண்ட் அகாடமி' என்கிற பெயரில் ஒரு பயிற்சி மையத்தையும் அவர் நடத்தி வருகிறார்.

இந்நிலையில், கோகுல்நாத்தும், அவர் நடத்தி வரும் பயிற்சி மையத்தில் பயின்ற மாணவர்களும் 15 கின்னஸ் சாதனைகள் படைத்துள்ளனர். இதில் கோகுல்நாத் மட்டும் 4 கின்னஸ் சாதனைகளை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து அவர் தனது சமூக வலைத்தளத்தில் "2022ஆம் ஆண்டில் கின்னஸ் புத்தகத்தில் எனது பெயர் இடம்பெற்றுள்ளதை பார்த்து சிறு குழந்தையை போல் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அந்த மகிழ்ச்சிக்கு ஈடு இணை எதுவுமே கிடையாது" என்று குறிப்பிட்டு உள்ளார்.

# கமல்ஹாசனுக்கு கொரோனா



நடிகரும் மக்கள் நீதி மய்யத் தலைவருமான கமல்ஹாசனுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

இதை தனது சமூக வலைதள பக்கத்தில் அறிவித்துள்ளார். "அமெரிக்கப் பயணம் முடிந்து திரும்பிய பின் லேசான இருமல் இருந்தது. பரிசோதனை செய்ததில் கொவிட் தொற்று உறுதியானது. மருத்துவமனையில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளேன். இன்னமும் நோய்ப்பரவல் நீங்கவில்லையென்பதை உணர்ந்து அனைவரும் பாதுகாப்பாக இருங்கள்" என்று தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

புதுடெல்லி

## சட்டம் – ஒழுங்கு தொடர்பில்

# பிரதமர் மோடி ஏன் பேசவில்லை?



நாட்டின் சட்டம் - ஒழுங்கை அமல்படுத்தும் அமைப்புகளின் நிலை பற்றி ஏன் பிரதமர் மோடி பேசவில்லை என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ப.சிதம்பரம் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாநில டிஜிபிக்களின் 56ஆவது மாநாடு லக்னோவில் நடந்தது. அதில் பிரதமர் மோடி பங்கேற்றதைக் குறிப்பிட்டு ப.சிதம்பரம் பேசியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல், நடிகர் ஷாருக்கான் மகன் ஆர்யன் போதை மருந்து வழக்கில் ஆதாரங்கள் ஏதும் இல்லை எனக் கூறி மும்பை உயர் நீதிமன்றம் பிணை வழங்கியது. அந்த வழக்கில் போதை மருந்து தடுப்பு அமைப்பு (என்சிபி) செயல்பட்டதையும் சிதம்பரம் சுட்டிக்காட்டியுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் ட்விட்டரில் பதிவிட்ட கருத்தில்; தேசிய போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ், குற்றம் செய்யும் நோக்கில் ஆர்யன் கான் குற்றம் செய்யவில்லை என்று நீதிமன்றம் தெரிவித்தது. ஆர்யன் காணைக் கைது செய்தவுடன் அவர் போதை மருந்து பயன்படுத்தினாரா, இல்லையா என்று ஏன் மருத்துவப் பரிசோதனை நடத்தவில்லை என்று நீதிமன்றம் விமர்சனம் செய்தது.

ஆதலால் எந்தச் சதியும் இல்லை, எந்தக் குற்றமும் இல்லை, எதற்காக இளைஞர்களை என்சிபி ஏன் குறிவைக்கிறது? இது திஷா ரவி வழக்கு மீண்டும் வந்ததுபோல் இருக்கிறது. இதுதான் நம்முடைய சட்டம் - ஒழுங்கு அமுல்படுத்தும் அமைப்புகளின் நிலை எனத் தெரிவித்தார்.



# 'அப்படி' தாயானார் ப்ரீத்தி



இயக்குனர் மணிரத்தினத்தின் 'உயிரே' திரைப்படத்தில் ஷாருக்கானுக்கு ஜோடியாக நடித்திருந்தவர் பிலபல பொலிவூட் நடிகை ப்ரீத்தி ஸிந்தா.

இவர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவை சேர்ந்த ஜீன் குட்னப் என்பவரைக் காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

இந்நிலையில் 46 வயதான பிரீத்தி தற்போது வாடகை தாய் மூலம் இரட்டைக் குழந்தைகளை பெற்றுள்ளர்.

மேலும் தனது குழந்தைகளுக்கு ஜெய் ஜிந்தா, ஜியா ஜிந்தா என பெயர் சூட்டி உள்ளதாகவும் அவர் தனது சமூக வலைத்தளத்தில் பதிவு செய்துள்ளார்.



# சூர்யாவுடன் இணைந்தார் சிவகார்த்திகேயன்

இயக்குனர் பாண்டிராஜ் இயக்கத்தில் சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் சூர்யாவின் 40வது திரைப்படம் 'எதற்கும் துணிந்தவன்'.

இத் திரைப்படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக சிவகார்த்திகேயனின் டாக்டர் படத்தின் கதாநாயகி பிரியங்கா அருள்மோகன் நடித்துள்ளார்.

அத்துடன் முக்கிய கதாபாதிரத்தில் நடிகர் சத்யராஜும் நடித்துள்ளார். இத்திரைப்படமானது அடுத்த வருடம் பெப்ரவரி 4 ஆம் திகதி வெளியாகவுள்ளதாகவும், இதற்கு இசையமைப்பாளர் டி இமான் இசையமைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப் படத்தின் பிரத்யேக VIDEO-ல் பாடல் ஆசிரியர்கள் பெயர் வரிசையில் கவிஞர் யுகபாரதி, நடிகர் சிவகார்த்திகேயன், இயக்குநர் விக்னேஷ் சிவன் ஆகிய மூவரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. எனவே இப்படத்தில் நடிகர் சிவகார்த்திகேயன் பாடல் எழுதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மும்பை

# ஆர்யானின் பிணையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய ஆலோசனை

உச்சநீதிமன்றத்தில் என்.சி.பி. அதிகாரிகள் ஆர்யான் பிணையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய ஆலோசித்து வருவதாக என்.சி.பி. தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மும்பை உயர்நீதிமன்ற பிணை உத்தரவை ஆய்வு செய்தபிறகு, சட்டப்பூர்வமான கருத்துகளை தற்போது எடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

சொகுசு கப்பலில் நடைபெற்ற போதை பொருள் விருந்தில் கலந்து கொண்டு போதைப் பொருள் பயன்படுத்தியதாகவும், போதை பொருள் வைத்திருந்ததாகவும் தேசிய பொதை பொருள் தடுப்புப்பிரிவு அதிகாரிகளால் ஷாருக்கான் மகன் ஆர்யன் கான் கைது செய்யப்பட்டிருந்தார்.

என்.சி.பி. சிறப்பு நீதிமன்றத்தில் இரண்டு முறை ஆர்யன் கானின் பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், மும்பை உயர்நீதிமன்றத்தில் பிணை வழங்கப்பட்டது. பல்வேறு நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது.

லிபியா

# படகு விபத்தில் 75 அகதிகள் உயிரிழப்பு



லிபியா அருகே மத்தியரதரைக் கடலில் அகதிகளை ஏற்றி வந்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாதில் 75 பேர் உயிரிழந்துள்ளதாக ஐ.நா. அகதிகள் நல அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 420 அகதிகளை இத்தாலிய கடலோரக் காவல் படை கடந்த 20 ஆம் திகதி மீட்டுள்ளதாகவும் அவர்களில் 70 பேர் இத்தாலிக்குச் சொந்தமான லாம்பெடுசா தீவுக்கு அழைத்து வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





ஜேர்மனி

## தனது வீட்டை விற்கும் உலகின் பணக்கார நாய்

உலகின் பணக்கார நாயான குந்தர்-4 (Gunther VI) தனது வீட்டை 32 மில்லியன் அமெரிக்க டொலருக்கு (இலங்கை மதிப்பில் சுமார் 647 கோடி) விற்பனை செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த கர்லோட்லா லெய்பென்ஸ்டன் என்பவர் கடந்த 1992 ஆம் ஆண்டு 58 மில்லியன் டொலர் சொத்தை தனது நாய்க்கு பரிசாக வழங்கியுள்ளார்.

இதனால் அந்த நாயுடைய வாரிசுகள் பணக்கார நாய்களாக வாழ்ந்து வருகின்றன. அந்தவகையில் தற்போது உலகின் பணக்கார நாயாகக் கருதப்படும் குந்தர் -4 சுமார் 32 மில்லியன் டொலருக்கு அமெரிக்காவின் மியாமியில் உள்ள தனது வீட்டை விற்பனை செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நாயின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக தனி குழு ஒன்றும் பணியாற்றி வருவதாகக் கூறப்படுகின்றது. கடந்த 1928-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இவ்வீட்டில் எட்டுகுளியல் அறைகள், ஒன்பது படுக்கை அறைகள், ஒரு நீச்சல் குளம் என்பன உள்ளமை குறிப்பிடத்தக்கது.






பிரித்தானியா

73 ஆண்டுகளுக்குப் பின்னர்

## நூலகம் திரும்பிய புத்தகம்




நூலகத்திலிருந்து இரவல் வாங்கப்பட்ட புத்தகமொன்று 73 ஆண்டுகள் கழித்து மீண்டும் அந்த நூலகத்திடமே வந்தடைந்த விநோத சம்பவமொன்று பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 1948ஆம் ஆண்டு இரவல் கொடுக்கப்பட்ட Stately Timber எனப்படும் குறித்த புத்தகம் அண்மையில் அஞ்சல் வழியாக கிடைக்கப்பெற்றுள்ளதாக அந்நூலகத்தின் ஊழியர்கள் ஆச்சரியத்துடன் தெரிவித்துள்ளனர்.

மேலும் அப்புத்தகத்தை இரவல் வாங்கியவரின் மகளே அனுப்பியதாகவும், மறைந்த தனது தந்தை, புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்க மறந்துவிட்டாரா அல்லது அதை வைத்துக்கொள்ள ஆசைப்பட்டாரா என்பது தெரியவில்லை என்றும் புத்தகத்துடன் வந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்

## தொலைக்காட்சி நாடகங்களுக்குத் தடை விதித்த நாடு

ஆப்கானிஸ்தானில் ஆட்சியை கைப்பற்றியுள்ள தலிபான்கள் அங்கு பல்வேறு கடுமையான சட்டங்களை அமல்படுத்தி வருகின்றனர்.

மேலும் சட்டங்களை மீறுபவர்கள் மீது கடுமையான தண்டனைகளையும் விதித்து வருகின்றனர். இந்நிலையில் அங்குள்ள தொலைக்காட்சி அலைவரிசைகளில் நாடகங்கள், மற்றும், பெண்கள் இடம்பெறும் அழகுசாதனப் பொருட்களின் விளம்பரங்களை ஒளிபரப்ப தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வெனிசூலா

# கின்னஸ் சாதனை படைத்த இசைக் கச்சேரி

வெனிசூலாவில் 8,573 இசைக் கலைஞர்கள் ஒருங்கிணைந்து நடத்திய இசைக் கச்சேரி, உலகின் மிகப் பெரிய இசைக் குழுவால் நடத்தப்பட்ட கச்சேரி என்ற சாதனையைப் படைத்துள்ளது. 'எல் சிஸ்டெமா' என்றழைக்கப்படும் அந்த இசைக் குழுவில் 12 முதல் 77 வயது வரையிலானவர்கள் பங்கேற்று சாய்கோவ்ஸ்கியின் 'ஸ்லாவோனிக் மார்ச்' என்ற பாடலை ஐந்து நிமிஷங்களுக்கு இசைத்து இச் சாதனையைப் படைத்துள்ளனர்.

இதற்கு முன்னர், ரஷ்ய தேசிய கீதத்தை இசைத்து அந்நாட்டு இசைக் குழு ஒன்று நடத்திய கச்சேரி மிகப் பெரிய குழு நடத்திய கச்சேரியாக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.







இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# போராடும் மேற்கிந்தியத் தீவுகள்

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் தடுமாறி வருகிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இந்த டெஸ்டின் நேற்றைய இரண்டாம் நாளை 3 விக்கெட்டுகளை 267 ஓட்டங்களைப் பெற்றவாறு தமது முதலாவது இனிங்ஸில் ஆரம்பித்த இலங்கை குறிப்பிட்ட இடைவெளிகளில் ஷனொன் கப்ரியல், றொஸ்டன் சேஸ், ஜோமெல் வொரிக்கானிடம் விக்கெட்டுகளை இழந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 386 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில், அணித்தலைவர் திமுத் கருணாரத்ன 147, தனஞ்சய டி சில்வா 61, பதும் நிஸங்க 56, தினேஷ் சந்திமால் 45 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், சேஸ் 5, வொரிக்கான் 3, கப்ரியல் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள், லசித் எம்புல்தெனிய, பிரவீன் ஜெயவிக்கிரம, ரமேஷ் மென்டிஸிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து நேற்றைய இரண்டாம் நாளில் 6 விக்கெட்டுகளை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறி வருகிறது.

தற்போது களத்தில், கைல் மேயர்ஸ் 22, ஜேஸன் ஹோல்டர் ஓர் ஓட்டத்துடன் காணப்படுகின்றனர். முன்னதாக, அணித்தலைவர் கிறேய்க் பிறத்வெய்ட் 41, ஜெர்மைன் பிளக்வூட் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தனர். பந்துவீச்சில், மென்டிஸ் 3, ஜெயவிக்கிரம 2, எம்புல்தெனிய 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்நிலையில், தலைக்கவசத்தில் பந்து தாக்கிய ஜெரெமி சொலஸனோவை ஷே ஹோப் பிரதியிட்டிருந்தார்.

அரசாங்க அதிபர் கிண்ணத்தை வென்ற

## கிண்ணியா பிரதேச செயலக வீரர்கள் கௌரவிப்பு

எப். முபாரக்



இவ்வாண்டுக்கான அரசாங்க அதிபர் கிண்ணத்தை வென்ற கிண்ணியா பிரதேச செயலக வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வானது, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ. அனஸ் தலைமையில் கிண்ணியா பிரதேச செயலகத்தில் நேற்று வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

இதன்போது வெற்றிக்காக அயராது உழைத்த வீரர்களுக்கு எம்.ஏ. அனஸ் தனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில்

## நியூசிலாந்தை வெள்ளையடித்த இந்தியா

இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில், நியூசிலாந்தை இந்தியா வெள்ளையடித்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கொல்கத்தாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என நியூசிலாந்தை இந்தியா வெள்ளையடித்துள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 184/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா 56 (31), இஷன் கிஷன் 29 (21), ஷ்ரேயாஸ் ஐயர் 25 (20), தீபக் சஹர் ஆ.இ 21 (08), வெங்கடேஷ் ஐயர் 20 (15), ஹர்ஷால் பட்டேல் 18 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் சான்ட்னெர் 3/27 [4], ட்ரெண்ட் போல்ட் 1/31)

நியூசிலாந்து: 111/10 (17.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: மார்டின் கப்தில் 51 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: அக்ஸர் பட்டேல் 3/9 [3], ஹர்ஷால் பட்டே; 2/26 [3], வெங்கடேஷ் ஐயர் 1/12 [3], யுஸ்வேந்திர சஹால் 1/26 [4], புவ்னேஷ்வர் குமார் 0/12 [2])

போட்டியின் நாயகன்: அக்ஸர் பட்டேல்

தொடரின் நாயகன்: றோஹித் ஷர்மா






இங்கிலாந்து பிறீமியர் லீக்

## எவெர்ற்றனை வீழ்த்திய சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோற்றது.

சிற்றி சார்பாக, ரஹீம் ஸ்டேர்லிங்க், றொட்றி, பெர்ணார்டோ சில்வா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பங்களாதேஷுக்கெதிரான இருபதுக்கு 20 தொடரை

## 3-0 என வென்ற பாகிஸ்தான்

பங்களாதேஷுக்கெதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரை 3-0 என பாகிஸ்தான் கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், மிர்பூரில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என தொடரை பாகிஸ்தான் கைப்பற்றியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 124/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொஹமட் நைம் 47 (50) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் வாஸிம் 2/15 [4], உஸ்மான் குவாதிர் 2/35 [4], ஷஹ்னவாஸ் தஹானி 1/24 [3], ஹரிஸ் றாஃப் 1/32 [4], இஃப்திஹார் அஹ்மட் 0/13 [4], மொஹமட் நவாஸ் 0/2 [1])

பாகிஸ்தான்: 127/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹைதர் அலி 45 (38), மொஹமட் றிஸ்வான் 40 (43) ஓட்டங்கள். பந்துவீச்சு: மகமதுல்லா 3/10 [1], அமினுல் இஸ்லாம் 1/26 [4], ஷொரிஃபுல் இஸ்லாம் 1/33 [3.5], மஹெடி ஹஸன் 0/19 [4], தஸ்கிஹ் அஹ்மட் 0/16 [3.1], நசும் அஹ்மட் 0/20 [4])

போட்டியின் நாயகன்: ஹைதர் அலி

தொடரின் நாயகன்: மொஹமட் றிஸ்வான்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 23 நவம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.